

# உங்கள் அழைப்பை கருத்தில் கொள்ளுங்கள்

Ps. ஆஸ்வின் ஜேம்ஸ்டட்

NOVEMBER 2019

அக்கினி ரதங்கள்

# அக்கினி ரதங்கள்

# உங்கள் அழைப்பை கருத்தில் கொள்ளுங்கள்

Ps.ஆஸ்வின் ஜேம்ஸ்டட்

# முகவுரை

இந்த புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ள செய்திகள் நம்முடைய போதகர் ஆஸ்வின் ஜேம்ஸ்டட்டால் நம் சபையில் புதன் கிழமை மற்றும் சனிக்கிழமை இரவு நடைபெறும் வேதாகம பயிற்சி வகுப்பில் பிரசங்கிக்கப்பட்ட வார்த்தைகள்.

நாங்கள் இந்த புத்தகத்தை மிகுந்த ஜெபத்தோடும் பிரயாசத்தோடும் உங்கள் ஆவிக்குரிய அதிகாரத்தையும், வல்லமையையும் அறிந்துகொண்டு, இருள் நிறைந்த இந்த உலகத்தை வென்று தேவனால் உங்களுக்கான தேவ சித்தத்தை அடைய உருவாக்கியுளளோம்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| *தேவனின் பிரமாணங்கள்* | *1* |
| *பரிசுத்த ஆவியானவர் அசுத்த ஆவியை தடை செய்கிறார்* | *17* |
| *உங்களுக்கான தேவ திட்டத்தை ஆவிக்குள்ளாக அறிந்து கொள்ளுங்கள்* | *32* |
| *ஆசிர்வாதம் என்றால் என்ன?* | *49* |
| *உயிர்பிக்கும் சாட்சிகள்* | *62* |

# தேவனின் பிரமாணங்கள்

**யோசுவா:1:8**

இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக: இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக: அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய். அப்பொழுது புத்திமானாகவும் நடந்து கொள்வாய்.

தேவன் எதற்காக நமக்கு நியாயயப் பிரமாணங்களை கொடுத்தார்? நாம் எதற்காக இரவும் பகலும் கர்த்தரின் வார்த்தையை தியானிக்க வேண்டும்?

நம் வாழ்வில் நடப்பது அனைத்தும் ஆவிக்குரியது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இந்த மாம்சீக உலகத்தில் நமக்கு பிரச்சினைகள் இருப்பது போலவே ஆவிக்குரிய உலகத்திலும் நமக்கு பிரச்சனைகள் உண்டு. இந்த உலகத்தில் சாலை போக்குவரத்து இருப்பது போலவே, ஆவிக்குரிய உலகத்திலும் சாலையும், போக்குவரத்தும் உண்டு. ஒவ்வொரு நாட்டுக்கும் எல்லையும். இராணுவமும் இருப்பது போல ஆவிக்குரிய உலகத்திலும் எல்லையும் ராணுவமும் உண்டு. சரீரத்தில் வாழும் நமக்குள் நல்லவர்கள் தீயவர்கள் இருப்பது போல, ஆவிக்குரிய உலகத்திலும் நல்ல ஆவிகள் மற்றும் தீய ஆவிகள் உண்டு. இந்த உலகத்தில் கொள்ளைக்கார்கள் மற்றும் திருடர்கள் இருப்பது போல ஆவிக்குரிய உலகத்திலும் கொள்ளையிடும் ஆவிகளும் திருடர்களும் இருக்கிறார்கள்.

இந்த அரசாங்கம் சாலையில் இடதுபுறம் வாகனத்தை ஓட்ட வேண்டும் தலையில் ஹெல்மெட் போட வேண்டும் என்று சட்டம் போடுடவது உங்களை கொடுமை படுத்த இல்லை. நம்மில் அநேகர் ஹெல்மெட்டை கைகளில் எடுத்துக் கொண்டு போகிறோம், காவல் அதிகார்களை பார்க்கும் போது தான் அணிய முயற்சிப்போம். ஏன்?

நம் மனதில் இவர்களுக்கு என்ன வேண்டும்? ஏன் நம்மை தொல்லை செய்கிறார்கள்? என்று நினைக்கிறோம். போக்குவரத்து அதிகாரிகள் மக்களுக்காக கவலை படுவதில்லை. அவர்கள் வேறு பல விஷயத்தை எதிர்பார்க்கிறார்கள். பொதுவாக சட்டம் என்பது நம்முடைய நலனுக்காக நாம் சாலையில் விழாமல் இருக்கவும் பிற வாகனங்களில் மோதாமல் இருக்கவும் ஏற்படுத்தப் பட்டது. நீங்கள் வாகனம் ஓட்டும் போது, இந்த சட்டங்களை மனதில் நிறுத்தி கொள்ள வேண்டும். அப்பொழுது, நீங்கள் பத்திரமாய் இருப்பீர்கள். ஒவ்வொரு முறையும் கவனமாக காரில் சீட்பெல்ட் அணிந்து ஓட்டினால் சட்டென்று பிரேக் பிடித்தாலும் நீங்கள் எதிலும் போய் மோதாமல் தப்பித்துக் கொள்வீர்கள். போக்குவரத்து அதிகாரிகளுக்காக அல்ல உங்கள் சொந்த நன்மைக்காக அணியுங்கள்.

பல வருடங்களுக்கு முன்பாக என்னிடம் ஒரு அம்பாசடர் கார் இருந்தது. அது என் தகப்பனாருடையது. அந்த காரில் சீட்பெல்ட் இல்லை. இருக்கைகள் இணைந்து இருக்கும். அதை நகற்ற முடியாது. முன் இருக்கைக்கும் காரின் பின் பகுதிக்கும் இடையில் நீண்ட இடைவெளி இருக்கும். ஒரு இரவில் நானும் என் தம்பியும் அந்த காரில் பயணித்து கொண்டிருந்தோம். என் தம்பி என்னுடன் முன் இருக்கையில் அமர்ந்து இருந்தான். பின் இருக்கைகளில் இன்னும் இரண்டு பேர் இருந்தார்கள். காரை ஒரு தெரு முனையில் திருப்புகையில் எதிரில் ஒரு டாடா சுமோ வந்தது. அதை ஓட்டியவர் தூங்கி விழுந்து எங்கள் கார் மீது மோதினார். அப்பொழுது நான் வெறும் இருபது கிலோ மீட்டர் வேகத்தில் தான் சென்று

கொண்டிருந்தேன் என் தம்பி ரிலாக்ஸாக அருகில் அமர்ந்திருந்தான். நான் கார் வருவதை பார்த்து ஸ்டேரிங்கை அழுத்தமாக பிடித்துக் கொண்டேன். என் தம்பியோ காரை கவனிக்கவில்லை கார் மோதிய வேகத்தில் முன் கண்ணாடியில் இடித்து மூக்கை உடைத்துக் கொண்டான். எனவே சீட் பெல்ட் நமக்கு தான் மிக முக்கியம். அது நம்முடைய பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்டது. அதுபோல, கட்டளைகளும் நமக்கென்று உருவாக்கப் பட்டது.

இங்கே தேவன் கட்டளையைப் பற்றி பேசுகிறார்.

**யோசுவா 1:8 இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக: இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக: அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய். அப்பொழுது புத்திமானாகவும் நடந்து கொள்வாய்.**

இதில் எழுதப்பட்ட அனைத்தையும் செய்ய நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். அப்பொழுது, நீங்கள் செழிப்பான வெற்றியுள்ள வாழ்க்கை வாழுவீர்கள்.

பாவத்தைப் பற்றி நாம் பேசும் போது, பரிசுத்தமான வாழ்வின் பயன் மரணத்திற்குப் பிறகுதான் தொடங்குகிறது என்ற தவறான எண்ணம் சிலருக்கு இருக்கிறது. பரலோகத்திற்கு போக நினைத்தால் பாவம் செய்யக் கூடாது. பாவம் செய்தால் பரலோகத்திற்கு போக முடியாது. ஆனால், உண்மை என்னவென்றால் இது பரலோகத்தைப் பற்றி மட்டுமல்ல இந்த உலகில் செழிப்பு மற்றும் வெற்றியைப் பற்றியது!

தேவன் நம்மை நேசிப்பதால் சில சட்டதிட்டங்களைக் கொடுத்தார்!

ஆவிக்குரிய உலகில் கூட ஆவிக்குரிய இடையூறுகள் மற்றும் துன்மார்க்கம் உள்ளன. நாம் உடல் ரீதியாக காயமடையாமல்

இருக்கலாம். ஆனால் ஆவிக்குரிய ரீதியில் காயமடையக்கூடும். தேவன் நாம் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார் பழைய ஏற்பாட்டில் இறப்புக்குப் பிறகு உள்ள வாழ்க்கை மற்றும் பரலோகம் பற்றி அதிகம் பேசப்படவில்லை. பழைய ஏற்பாட்டு நாட்களில் பெரும்பாலான இடங்களில் மட்டுமே நித்தியம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அதைத்தவிர, மரணத்திற்குப் பிறகு உள்ள வாழ்க்கை மற்றும் பரலோகம் பற்றிய வெளிப்பாடு மக்களுக்கு இல்லை.

தேவன் நம்மை நேசிக்கிறார். நீங்கள் ஒன்றைச் செய்யாவிட்டால் அவர் உங்களைக் கொண்று போடுவேன் என்று கூறவில்லை. அவர் உங்களைக் கொல்லப் போவதில்லை உங்கள் தந்தையையும் தாயையும் விட தேவன் மிகுந்த அன்புள்ளவர். நீங்கள் தவறான போக்குவரத்தில் செல்கிறீர்கள் என்றால் உங்கள் தந்தை வந்து உங்களை மோதுவாரா? இல்லை ஆனால் உங்களுக்கு காயம் ஏற்பட்டால் அவருக்க வலிக்கும்.செழிப்பு மற்றும் வெற்றி என்பது தேவனுடைய கட்டளைகளைப் பின்பற்றுவதை அடிப்படையாகக் கொண்டது.

ஜனங்கள் கட்டளையை மீற முயற்சிக்கின்றனர். அவர்கள் கட்டளைகள் எல்லாம் பழைய ஏற்பாடு என்று கூறுகிறார்கள். நீங்கள் கட்டளைகளினால் நியாயந்தீர்க்கப்பட மாட்டீர்கள். புதிய ஏற்பாட்டில், பரிசுத்த ஆவியானவர் பவுல் மூலமாக எழுதுகிறார், கட்டளை என்பது பழைய ஏற்பாட்டில் கற்களில் எழுதப்பட்ட மரணத்துக்கேதுவான ஊழியமாகும். எனவே நீங்கள் கட்டளைகளினால் நியாயந்தீர்க்கப்படப் போவதில்லை. கட்டளைகளை மீறியதற்காக நீங்கள் தண்டிக்கப்பட மாட்டீர்கள். புதிய ஏற்பாட்டில், போக்குவரத்து போலீசார் இல்லை. தேவன் போக்குவரத்துக் காவலரைப் போல அல்ல. இது உங்கள் சொந்த பாதுகாப்புக்காக என்ற அவர் கூறுகிறார். அதைப் பின்பற்றுங்கள்.

கட்டளைகள் பொதுவான வழிகாட்டுதலுக்காகவே. கட்டளைகளுக்கு அப்பாற்பட்டு, நம்மை வழிநடத்த பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார். தேவனுடைய கட்டளை, "கொலை செய்யாதீர்கள்" என்ற கூறுகிறது. இது ஒரு பொதுவான வழிகாட்டுதலாகும். பரிசுத்த ஆவியானவர் "வெறுக்காதீர்கள்" என்ற கூறுகிறார். எத்தனை அழகு அல்லவா! பழைய ஏற்பாடு ஒருபோதும் யாருக்கும் எதிராக வெறுப்பை ஏற்படுத்துவதை எதிர்த்து நிற்காது. நீங்கள் ஒருவேளை அவதூறாக பேசினால் கூட தண்டிக்கப் பட மாட்டீர்கள். பழைய ஏற்பாட்டில் "கொலை செய்யாதீர்கள்" என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், புதிய ஏற்பாட்டில், பரிசுத்த ஆவியானவர் "அவரை மன்னியுங்கள்" என்று கூறுகிறார். மேலும், கோபம் கொண்டிருக்க வேண்டாம் என்று கூறுகிறார்.

ஆகவே, வேதத்தில் கட்டளை ஏன் கொடுக்கப்பட்டுள்ளது என்று குழப்பமடைய வேண்டாம். வேதாகாமத்தில் பழைய ஏற்பாட்டை கிழித்துப் போட வேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள். புதிய ஏற்பாடு மட்டுமே இருக்க வேண்டும். இயேசு மட்டுமே! பழைய ஏற்பாடு இராமாயணம், மகாபாரதம் போன்றது என்கிறார்கள். சில நேரங்களில் மக்கள் மிகவும் பைத்தியம் பிடித்து தேவனுடைய வார்த்தையை தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு விஷயங்களை தாங்களே கற்பனை செய்ய ஆரம்பிக்கிறார்கள். ஆனால் அப்படியிராமல், சரியாக கற்றுக் கொண்டு அதன் படி, வாழ முயற்சிக்க வேண்டும்.

**உபாகமம் 6:4-9**

4. இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.

5. நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு பலத்தோடும் அன்பு கூறுவாயாக.

6. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது.

7. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்கு கருத்தாய் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கும் போதும், வழியில் நடக்கிற போதும், படுத்துக் கொள்கிற போதும், எழுந்திருக்கிற போதும், அவைகளை குறித்துப் பேசி,

8. அவைகளை உன் கையின் மேல் அடையாளமாய் கட்டிக் கொள்வாயாக: அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது.

9. அவைகளை உன் வீட்டின் நிலைகளிலும் உன் வாசல்களிலும், எழுதுவாயாக.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வசனங்களை இன்று நாம் அப்படியே பின்பற்ற வேண்டியதில்லை. அதன் முக்கியத்துவத்தை அவர் நமக்கு சொல்கிறார்.

புதிய ஏற்பாடு வாக்குத்தத்தங்களைப் பற்றியது. புதிய ஏற்பாட்டில் நாம் கட்டளைகளினால் நியாயந்தீர்க்கப்படப் போவதில்லை. அதாவது ஒரு கட்டளையை மீறினால், காவலரைப் போல தேவன் நம்மை தண்டிக்கப் போவதில்லை. ஏனென்றால், கட்டளையை மீறியதற்கான தண்டணையும், தீர்ப்பும் இயேசுவால் சிலுவையில் சுமந்து முடிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இன்று, முக்கியமானது வாக்குத்தத்தம் ஆகும். தேவனுடைய வாக்குத்தத்தத்தை நாம் நம்ப வேண்டும், பேச வேண்டும், பிடித்துக் கொள்ள வேண்டும்.

ஆவிக்குரிய உலகில் சில விஷயங்கள் நம்மை விழுங்க முயற்சிக்கின்றன. நீங்கள் ஒருவழிச் சாலையில் எதிர் திசையில் செல்லும் போதும், உங்கள் சீட் பெல்ட்டை அணியாத போதும் பிற வாகனங்களில் மோதிக் கொள்கிறீர்கள். அதற்காக தேவன் உங்களை தண்டிப்பது இல்லை. நீங்கள் புகை பிடித்தால் அல்லது

குடித்தால், உங்கள் கல்லீரல் மற்றும் நுரையீரலைக் கெடுப்பீர்கள். நீங்கள் ஆரோக்கியமாக சாப்பிடவில்லையென்றால், உங்கள் ஆரோக்கியத்தை கெடுப்பீர்கள். உங்கள் தலைமுடியில் எண்ணையைப் பயன்படுத்தாவிட்டால், உங்கள் தலைமுடியைக் கெடுப்பீர்கள். நீங்கள் செய்ய வேண்டிய சில விஷயங்களை நீங்கள் செய்யாத போது, நீங்கள் குழப்பமடைகிறீர்கள். கர்த்தர் உங்களை குணமாக்கவும், விடுவிக்கவும், மாற்றவும், ஆசிர்வதிக்கவும் முடியும். ஆனால், அதுவரை உங்களுக்கு எதிராக செயல்படும் சக்திகளால் நீங்கள் பாதிக்கப்படுகிறீர்கள். தேவனுடைய வாக்குத்தத்தங்களை நீங்கள் முழு இருதயத்தோடு விசுவாசிக்கும் போது, நீங்கள் செழிப்பாகவும், வெற்றிகரமாகவும் இருப்பீர்கள்.

உபாகமம் புத்தகத்தில் இன்னொரு வசனத்தை படிக்கும் போது, இதை நாம் நன்றாகப் புரிந்து கொள்வோம்.

இது போருக்கு செல்ல வழங்கப்பட்ட கட்டளையாகும்.

**உபாகமம் 20: 1-4**

1. நீ உன் சத்துருக்களுக்கு எதிராக யுத்தஞ்செய்யப் புறப்பட்டுப் போகையில், குதிரைகளையும் இரதங்களையும் உன்னிலும் பெரிய கூட்டமாகிய ஜனங்களையும் கண்டால், அவர்களுக்கு பயப்படாயாக: உன்னை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்.

2. நீங்கள் யுத்தஞ்செய்யத் தொடங்கும் போது, ஆசாரியன் சேர்ந்து வந்து, ஜனங்களிடத்தில் பேசி:

3. இஸ்ரவேலரே, கேளுங்கள்: இன்று உங்கள் சத்துருக்களுடன் யுத்தஞ்செய்யப் போகிறீர்கள்: உங்கள் இருதயம் துவல வேண்டாம்: நீங்கள் அவரைப் பார்த்துப் பயப்படவும், கலங்கவும், தத்தளிக்கவும் வேண்டாம்.

4. உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடே யுத்தம் பண்ணவும் உங்களை இரட்சிக்கவும், உங்களோடேகூடப் போகிறவர் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல்ல வேண்டும்.

இங்கே கர்த்தர் இஸ்ரவேலரை விடப் பெரிய ஒரு இராணுவத்துடன் போருக்குச் செல்ல அறிவுறுத்துகிறார். இந்த ஜனங்களுக்கு குதிரைகளும் இரதங்களும் இல்லை. ஆனால், உங்களுடையதை விட பெரிய ராணுவத்துடன் நீங்கள் போருக்குச் செல்ல வேண்டியிருந்தால், நீங்கள் இப்படி தான் இருக்க வேண்டும் என்று கூறுகிறார்.

இந்த வசனங்களின் இரண்டு கட்டளைகள் கொடுக்கப்பட்டுள்ளன. “பயப்பட வேண்டாம்” மற்றும் “கலங்க வேண்டாம்”.

சட்டம் என்பது பின்பற்றுவதற்காகத்தான். இராணுவம் உங்களை விடப் பெரியது மற்றும் இரதங்களையுடையது. உங்களிடம் இரதங்கள் கிடையாது. இராணுவத்திடம் குதிரைகள் உண்டு, உங்களிடம் கிடையாது. உங்களிடம் கழுதைகள் மாத்திரம் உள்ளன. கழுதைகள் எங்ஙனம் குதிரைகளோடு ஓட முடியும்?. இது எப்படி இருக்கிறதென்றால், புல்லட் வாகனத்தையும் டி.வி.எஸ்ஸையும் ஒப்பிடுவதைப்போல. ஒரு டி.வி.எஸ் வாகனத்தையும், ஹார்ட்லி டேவிட்சன் வாகனத்தையும் ஒப்பிடுவதைப்போல, ஒரு முயலையும், ஆமையையும் ஒப்பிடுவதைப்போல உள்ளது. வெறும் கழுதைகளை வைத்துக்கொண்டு குதிரைகளோடும், இரதங்களோடும் எவ்வாறு போட்டி போடயியலும்?. ஆனாலும் பயமும், கலக்கமும் அடைய வேண்டாம் என்று கர்த்தர் கட்டளை கொடுக்கிறார்.

கட்டளை என்னவென்றால், “பயப்படவேண்டாம் தேவன் நம்மோடிருக்கிறார்” என்பதே. ராணுவத்தையும், குதிரைகளையும், இரதங்களையும் நாம் எதிர்த்துப் போர் புரியவேண்டும். நமக்குள் இருப்பவர் இந்த உலகில் இருப்பவனைக் காட்டிலும் பெரியவர். நாம் பயந்தால் தோற்கடிக்கப்படுவோம். பயம் என்பது

விசுவாசமின்மை. உங்களுக்கு விசுவாசம் இருந்தால் எதற்கும் பயப்படமாட்டீர்கள்.

***அறிக்கை:*** பயப்படமாட்டேன்.

| |
|---|
| **உபாகமம் 20:8** பின்னும் அதிபதிகள் ஜனங்களுடனே பேசி, பயங்காளியும் திடனற்றவனுமாயிருக்கிறவன் எவனோ, அவன் தன் சகோதரரின் இருதயத்தை தன் இருதயத்தைப் போலக் கரைத்துபோகப் பண்ணாதபடிக்கு, தன் வீட்டுக்கு திரும்பிப்போகக்கடவன் என்று சொல்ல வேண்டும். |

நீங்கள் பயத்தோடிருந்தால் முகாமிற்குள் இருக்க தகுதியானவர்கள் அல்ல. உங்கள் உடனிருப்பவர் பயத்தோடிருந்தால் அவரை விட்டு விலகுங்கள். அவர்களோடு சேருவதோ, ஆலோசிப்பதோ கூடாது.

நீங்கள் இப்போது சொல்லலாம், “பயம் தானாக, வருகிறதே, என் வயிறு சுருள்கிறது, என் இருதயம் வேகமாகத் துடிக்கிறது, வியர்த்துக் கொட்டுகிறது, மேலும் கீழுமாக மூச்சு வாங்குகிறது. பயத்தினால் இவையெல்லாம் தானாக, கட்டுப்பாடின்றி வருகிறதே பாஸ்டர்”.

இந்த இடத்தில்தான் நமக்கு “ஆவியானவர்”, எனப்படுகிற தேற்றரவாளன் தேவைப்படுகிறார். நீங்கள் சிறிதளவேனும் ஆவிக்குரியவர்களாக மாறவேண்டும். வெறும் கிறிஸ்தவனாக மாத்திரம் இருந்தால் போதாது, ஆவிக்குரிய நபராக இருக்க வேண்டும்.

ஆவியானவர் உங்களைத் தேற்றுகிறவராய் எப்போதும் உங்களோடு இருக்கிறார். அவர் உங்களை கீழே விழ விடாமல், கற்றுக்கொடுக்கிறவராய் இருக்கிறார். நீங்கள் தவறிக் கீழே விழுந்தாலும் அவர் உங்களைத் தூக்கிவிடுகிறவர்.

***அறிக்கை:*** *ஆவிக்குரிய நபராக மாறுவேன்.*

ஒரு கிறிஸ்தவனாக மட்டுமிருந்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம், ஆனால் எளிதில் விழுந்து விடக்கூடும். ஆனால் ஒரு ஆவிக்குரிய நபரோ அசைக்கப்பட முடியாதவர். இயேசு தண்ணீரின் மேல் நடக்கத் துவங்கினார். அவர் அவ்வாறு நடக்கத் தொடங்கியதும் படகில் இருந்தவர்கள் அச்சமடைந்தார்கள். அவர்கள் அவரை ஒரு ஆவி(பேய்) என்று நினைத்தார்கள். இயேசு அருகில் வந்தபோது பேதுரு,"நான் நீரின் மேல் நடந்து உம்மிடத்திற்கு வரக் கட்டளையிடும்",என்று சொன்னார். அதற்கு இயேசு,"வா",என்றார்.

**மத்தேயு 14:26** - அவர் கடலின் மேல் நடக்கிறதை சீடர்கள் கண்டு, கலக்கமடைந்து ஆவேசம் என்று சொல்லி பயத்தினால் அலறினார்கள்.

பேதுரு படகிலிருந்து குதித்து கடல் மேல் நடந்தான். அவன் உற்சாகமாய் நடக்க ஆரம்பித்த போது, பிசாசு பயப்படும்படியான சூழ்நிலைகளை உண்டாக்கினான். பிசாசு உங்கள் இருதயத்திற்குள் பிரவேசிக்கமுடியாது. ஆனால் அவனால் பயப்படும்படியான சூழ்நிலைகளை மட்டுமே உண்டாக்க முடியும். பேதுரு ஓங்கியடித்த காற்றையும், பொங்கிப்பாய்ந்த அலைகளையும் பார்த்துப் பயந்து விட்டான். அந்தக்கணமே அவன் தண்ணீரில் மூழ்க ஆரம்பித்தான்.

பேதுரு கதறினபோது இயேசு தம் கரம் நீட்டி அவனைத் தூக்கிவிட்டு,"அற்ப விசுவாசியே, ஏன் பயப்பட்டாய்?", என்றார்.

ஆவியானவர் உங்களைத் தேற்றுகிறவராய் எப்போதும் உங்களோடு இருக்கிறார். அவர் உங்களை கீழே விழ விடாமல், கற்றுக்கொடுக்கிறவராய் இருக்கிறார். நீங்கள் தவறிக் கீழே விழுந்தாலும் அவர் உங்களைத் தூக்கிவிடுகிறவர்.

***அறிக்கை:*** *சிறிதளவேனும் ஆவிக்குரியவராய் மாறவேண்டும்*

பரிசுத்த ஆவியானவருக்காய் வாஞ்சையோடிருங்கள். நாம் ஆவிக்குரியவர்களாய் மாறும்போது பயமும், கலக்கமும் நம்மைவிட்டு ஓடிப்போகும். இது இருதயத்தில் ஏற்படுகிற மாற்றம். நான் கைக்கொள்ளுகிற இந்த அணுகுமுறை பெருமை பாராட்டல் அல்ல, ஆவிக்குரிய அதிகாரம்.

***அறிக்கை:*** *எனக்கு ஆவிக்குரிய அணுகுமுறை(குணாதிசயம்) உள்ளது. எனக்கு பரிசுத்த ஆவியானவரின் அணுகுமுறை(குணாதிசயம்) உள்ளது.*

நல்ல மற்றும் மோசமான அணுகுமுறைகளும், வலிமையான மற்றும் பலவீனமான அணுகுமுறைகளும் உள்ளன. நமக்கு பரிசுத்த ஆவியானவரின் அணுகுமுறையே வேண்டும். ஒரு மிகப்பெரிய சேனை குதிரைகளோடும், ரதங்களோடும் நமக்கு எதிரிட்டு வரும்போது அதனை பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலோடு எதிர்கொள்ளவேண்டும். கோலியாத் உரத்த சத்தமிட்டுக்கொண்டும், வெறியோடு உறுமிக்கொண்டும் இருந்தான். ஆவிக்குரிய அணுகுமுறை இல்லாத இஸ்ரவேலர் கோலியாத்தின் வெறியாட்டத்தைப் பார்த்து பயந்தார்கள். ஆனால் ஆவிக்குரிய அணுகுமுறையோடு இருந்த சிறு பையனான தாவீது அவனைக் கொண்றுவிட்டான்.

நீங்கள் பயத்தோடு இருந்தால் யுத்தகளத்திற்கு தகுதியானவர்கள் அல்ல. நீங்கள் சிறிதளவேனும் ஆவிக்குரியவராய் மாறவேண்டும். நீங்கள் ஆவிக்குரியவராய் இருக்கும்போது மாம்சீகமாக, தர்க்கரீதியாக பேசவோ, சிந்திக்கவோ, நடக்கவோ மாட்டீர்கள். ஆவிக்குரிய நடத்தல் மற்றும் விசுவாசத்தினால் எனக்கு எதிராக யாரும் நிற்கமுடியாது. ஏனென்றால் கர்த்தராகிய இயேசுவின் ஆவி எனக்குள் இருப்பதனால் நான் யாராலும் வெல்லமுடியாதவன் மற்றும் என் நடைகள் அவரால் போதிக்கப்பட்டிருக்கின்றன.

தானியேல் ஒரு அணுகுமுறையோடு கூடிய மனிதன். எனக்கு அவருடைய அணுகுமுறை மிகவும் பிடிக்கும். நீங்கள் அதை விசுவாசம் என்று சொல்லலாம். ஆனால் நான் அதை அணுகுமுறை என்று சொல்லுவேன். சர்வவல்லமையுள்ள தேவனின் பாதுகாப்பின் கீழ் இருந்ததினால் தானியேல் தீயைப் பற்றியோ, சிங்கக்கெபியைப் பற்றியோ கடுகளவேனும் அச்சமடைந்ததில்லை.

எனக்கு அது கிடைக்காவிட்டால் என்ன செய்வது? யாரும் என்னை ஆதரிக்காவிட்டால் என்ன செய்வது? நீங்கள் ஆவிக்குரியவராய் இருந்தால் இந்தக் கேள்விகளே உங்களுக்குள் எழாது. உங்கள் அணுகுமுறையில், மனப்பாங்கில் மாற்றம் வரும். கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாயிருக்கிறோம், பழையவைகள் ஒழிந்தன. எல்லாம் புதிதாயின. வேதம் சொல்லுகிறது புதிய காரியம் என்பது புதிய அணுகுமுறையான விசுவாசமே. நம்மில் பலருக்கு இது தெரியாது. ஆகவே எப்படி எதிர்பார்க்கவேண்டும் என்று நமக்குத் தெரிவதில்லை.

நான் என்னை ஆவிக்குரியவன் என்றழைத்துக்கொள்ளும்போது, அது ஒரு புதிய அணுகுமுறையை, மனப்பாங்கைத் தருகிறது. நான் இயேசு கிறிஸ்துவின் சீடன்.

தானியேல், தாவீது, மொர்தெகாய், எஸ்தர் மற்றும் ஈசாக்கு இவர்கள் மிகவும் அமைதியானவர்கள் (ஜில்லானவர்கள்..கூலானவர்கள்). அவர்கள் ஒரு வித்தியாசமான மனப்பாங்கு உடையவர்கள். அவர்கள் எதைப்பற்றியும் கவலைப்படாதவர்கள்.

சவுலும் ஒட்டுமொத்த ராணுவமும் நம்பிக்கை இழந்து நிலைகுலைந்தபோது, தாவீது கூலாக இருந்து கோலியாத்தைத் தோற்கடித்தான்.

மூன்று வருடங்களாக மழையின்மையினால் பஞ்சமாக இருந்தது. அடுத்த வருடம் என்ன செய்வது என்று அனைவரும் திகைத்தார்கள். ஆனால் ஈசாக்கு மிகவும் கூலாக இருந்தார். அந்தப் பஞ்சக் காலத்திலும் அவர் விதை விதைத்து நூறு மடங்கு

பலன் அடைந்தார். ஈசாக்கு மிகவும் கூலாக இருந்ததற்குக் காரணம் அவர் இருதயத்தில் ஏதோ ஒன்று இருந்தது. இந்த அணுகுமுறையானது அவருக்கு தேவனோடு இருந்த ஆவிக்குரிய (சந்திப்பு) அனுபவத்தின் வெளிப்பாட்டிலிருந்து உருவானது.

தானியேலுக்கு நிறைய எதிரிகள் இருந்தார்கள். அவர்கள் அவரைக் கொல்ல விரும்பி அதற்காகத் திட்டம் தீட்டினார்கள். இந்த நெருக்கத்தினால் அவர் தனது ஆவிக்குரிய அணுகுமுறையை இழந்திருந்திருக்கலாம். ஆனால் அதைக் காத்துக் கொள்வதற்காக அவர் ஒரு நாளைக்கு மூன்று முறை ஜெபித்தார்.

நீங்கள் ஆவிக்குரியவர்களாய் இருப்பது மிக அவசியம். தாவீது எல்லா நேரத்திலும் யாழ் போன்ற ஒரு இசைக்கருவியை வைத்து எப்போதும் பாடுகிறவனாகவும், துதிக்கிறவனாகவும் இருந்தான். அவன் எப்போதும் ஆவிக்குள் இருந்தான். சிங்கம் வந்தபோது, அவனுக்கு எழுப்புதல் கூட்டமெல்லாம் தேவையாயிருக்கவில்லை. அவன் போய் சிங்கத்தைக் கொன்றான். கரடி வந்தபோது அவ்வாறே அதனையும் கொன்றான். கோலியாத் வந்தபோது அவனைப் போர்க்களத்தில் சந்திப்பதற்கான தைரியம் தாவீதுக்குள் இருந்தது. ஆவிக்குரியவனாய் இருந்ததால் தாவீதினால் கோலியாத்தைக் கொல்ல முடிந்தது.

இன்று நீங்கள் சாதாரண மனிதராக இருந்தாலும், பிற்காலத்தில் நீங்கள் ஒரு தலைமை நிர்வாக அதிகாரியாக முடியும். அதற்குத் தேவையானதெல்லாம் நீங்கள் ஒரு ஆவிக்குரியவராக வேண்டுமென்பதே. தாவீது தனது சகோதரர்களுக்கு உணவு கொண்டு செல்பவராக இருந்த போதிலும், சந்தர்ப்பம் கிடைத்தபோது, அதை அவர் பயன்படுத்திக்கொண்டார்.

***அறிக்கை:*** *நான் சரியான வாய்ப்புக்காகக் காத்திருக்கிறேன். அது வரும்போது நான் அதைப் பயன்படுத்திக்கொள்வேன், ஏனென்றால் நான் ஆவிக்குரியவன்(ள்).*

ஆபிரகாம் ஆண்டவரோடு நடந்தார். அவர் ஆண்டவரோடு இணைந்திருந்தபடியால் அவரால் முன்னேறிச்செல்ல முடிந்தது. ஆகவே இவைகள் யாவும் நம்முடைய அணுகுமுறை மற்றும் விசுவாசத்தைப் பற்றியது. இவைகளின் மூலகாரணம் நமக்கு ஆண்டவரோடு கூடிய ஆவிக்குரிய உறவு மாத்திரமே.

ஒரு முறை மாத்திரம் ஜெபம் செய்யாதீர்கள். உங்களது வழக்கமான, பாரம்பரியமான ஜெபத்தை நிறுத்துங்கள். தாவீதைப் போலவும், தானியேலைப் போலவும் ஜெபிக்க ஆரம்பியுங்கள். அந்த நாட்களில் கவனச்சிதறல்கள் மிகக்குறைவு. ஆகவே மூன்று முறை ஜெபம் போதுமானது. தானியேலுக்கு மொபைல் ஃபோன் இல்லை. இருந்திருந்தால் அவருக்கும் அரை மணிக்கொரு தரம் கவனம் சிதறியிருக்கும். ஆகவே கவனச்சிதறல்கள், கவலை, மன அழுத்தம் மற்றும் பதற்றம் ஆகியவை நம் காலத்தை விட அந்தக்காலத்தில் மிகவும் குறைவு.

இன்றைய உலகில் நமது கவனத்தைச் சிதறடிப்பவைகள், குலைப்பவைகள் ஏராளம். ஆகவே நாம் அதிகமாக ஜெபிப்பது மிக அவசியமாயிருக்கிறது. தானியேலுக்கு மூன்று முறை ஜெபம் போதுமானதாயிருந்தது. இன்று நம்முடைய அணுகுமுறை சிதறாமல்(குலையாமல்) காக்கப்பட முப்பது முறைகள் ஜெபம் தேவையாயிருக்கிறது. இந்த இடைவிடாத ஜெப வழக்கமே, ஆவிக்குரிய மனிதன் தேவனுடைய ஆவியால் நடத்தப்படுதல் ஆகும். தாவீது ஒரு ராஜா. அவருக்கு நிறைய பிரச்சினைகள் இருந்தன. ஆனாலும் அவரால், " நான் தேவனை என் வலது பாரிசத்தில் வைத்திருக்கிறேன், ஆகையால் நான் அசைக்கப்படுவதில்லை", என்று சொல்ல முடிந்தது. அவர் எல்லா நேரங்களிலும் தேவ ஆவியோடு இணைந்திருந்தார்.

நாம் தாவீதைப் போல தேவனை நம் முன்னால் வைப்பதில்லை, ஆனால் இந்த வசனத்தை மாத்திரம் சொல்லிவிட்டுத் தூங்கிவிடுகிறோம். நாம் 8-12 மணி நேரங்கள் தூங்குகிறோம். பிறகு எழுந்து இரவு முழுமையும் காத்தமைக்காக

தேவனுக்கு நன்றி சொல்கிறோம். தாவீது பாடினார். அது அவருக்கு வெறும் வார்த்தைஅல்ல, அது அவருடைய அனுபவம். இன்றைய சபைக்கு அது வெறும் வார்த்தை மாத்திரமே. அது நமக்கும் (தாவீதைப்போன்று) நம்முடைய அனுபவமாக மாற வேண்டும்.

***அறிக்கை: நான் கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு அங்கமாயிருக்கிறேன். கிறிஸ்து என்னுடைய தலையாயிருக்கிறார். மற்ற ஆவிகள் என்னுடைய காலின் கீழ்.***

கிறிஸ்து சபையின் தலையாக இருக்கிறார். சாத்தான் நம்முடைய காலின் கீழாக இருக்கிறான்.

ஆவிக்குரிய பிரகாரம் நாம் அசுத்த ஆவிகளுக்கு மேம்பட்டவர்களாய் இருக்கிறோம். நாம் கிறிஸ்துவுக்குள், பரலோகில், தேவனுடைய வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிறோம்.

# *பரிசுத்த ஆவியானவர் அசுத்த ஆவிகளைத் தடைசெய்கிறார்*

**2தெச 2:6-10**

6.அவன் தன் காலத்திலே வெளிப்படும் படிக்கு இப்பொழுது அவனைத் தடை செய்கிறது இன்னது தென்றும் அறிந்திருக்கிறீர்களே.

7.அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது ஆனாலும் தடை செய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படும் முன்னே அது வெளிப்படாது.

8.நீக்கப்படும் போது அந்த அக்கிரமக் காரன் வெளிப்படுவான் அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார்.

9.அந்த அக்கிரமக் காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின் படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்.

10.கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப் படத்தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற் போனபடியால் அப்படி நடக்கும்.

மேற்கண்ட வசனங்கள் அசுத்த ஆவிகளைக் குறித்துப் பேசுகிறது. முக்கியமாக அந்திக் கிறிஸ்துவைப்பற்றி பேசுகிறது. இந்த செய்தியில் பரிசுத்த ஆவியானவருடைய கிரியைகளையும், அவருடைய துணையோடு ஆவிக்குரிய உலகில் நாம் செய்ய வேண்டியதையும் குறித்து உங்களுக்கென்று ஒரு புரிதலை உண்டாக்க விரும்புகிறேன்.

**2தெச2:6-10**ல் அசுத்த ஆவியைக் குறித்து பேசப்படுகிறது. அசுத்த ஆவியின் கிரியைகளை ஏதோ ஒன்று மட்டுப்படுத்துகிறது. அசுத்த ஆவியின் இரகசியம் ஏற்கனவே இரகசியமாய் கிரியை செய்து கொண்டே இருக்கிறது. அது முழுமையாக இல்லை. அது இரகசியமாக இருளிலே செய்யப்படுகிறது. இப்போது கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறவர், அவர் எடுக்கப்படும்வரை, தொடர்ந்து கட்டுப்படுத்துவார். யார் இந்த அசுத்த ஆவியைக் கட்டுப்படுத்துவது? பரிசுத்த ஆவியானவர். வெளிச்சத்தின் ஆவி, அசுத்த ஆவியைக் கட்டுப்படுத்துகிறது.

வேதத்தில் நாம் ஒருமுறை படிக்கிறோம். இயேசுவானவர் மறுபடியும் வரும்போது பரிசுத்த ஆவியானவர் எடுத்துக் கொள்ளப்படுவார். பரிசுத்த ஆவியானவர் தன்னோடு கூட இந்த சபையையும் எடுத்துக்கொள்வார். பரிசுத்த ஆவியானவர் எடுத்துக் கொள்ளப்பட்டபிறகு அசுத்த ஆவிகள் முழுஅதிகாரத்தோடு கிரியை செய்யும். அக்கிரமக்காரன் வெளிப்படுவான். இரண்டாவது வருகைக்குப் பிறகு அவனைக் கர்த்தர் தமது சுவாசத்தினால் அழிப்பார். அசுத்த ஆவியின் கிரியைக்குத்தக்க பலன் அது.

பத்தாம் வசனத்தைப் படிப்போம். சிலருக்கு இந்த சத்தியம் பிடிக்காது. அவர்கள் பரிசுத்த ஆவியானவரை ஏற்றுக் கொள்வதில்லை. அவர்கள் அசுத்த ஆவியின் மூலமாய் வஞ்சிக்கப்படுவார்கள். பரிசுத்த ஆவியானவர் அசுத்த ஆவியை தம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வார். இப்போது பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வாசம் பண்ணுகிறார். உங்களைச் சுற்றிலும் உள்ள ஆவியைவிட உங்களுக்குள்ளே உள்ளே

பரிசுத்த ஆவியே பலமுள்ளவர். இந்த சத்தியத்தை அறிந்து கொள்வது மிகமிக முக்கியமானது.

நமக்குத் தெரியும் ஒரு பல்லியை விட நாம் மிக பெலமுள்ளவர்கள். ஒரு பாம்பை விட நாம் பெலமுள்ளவர்கள். இந்த இடத்திலே பைத்தானும், அனகோண்டாவும் இல்லை. நாம் பார்க்கும் சின்ன பாம்பைவிட நாம் பலமுள்ளவர்கள். ஆனால் இப்போது ஒரு பாம்பு வந்தால், எனக்குத் தெரியும் எல்லாருமே எங்கேயாவது ஏறி விடுவீர்கள். நீங்கள் சுலபமாக ஒரு பாம்பைக் கொண்று விடலாம். நான் அநேக பாம்புகளைக் கொண்று இருக்கிறேன். உங்களுக்குத் தெரியும் பாம்பு ஒன்றுமே இல்லை என்று. ஆனால் அந்த பாம்பை பார்த்த உடனே உங்களுக்குள்ளே ஒரு பயம் வருகிறது. நீங்கள் ஓடி விடுகிறீர்கள். சிலா் கரப்பான் பூச்சியைப் பார்த்துக்கூட அப்படித்தான் செய்வோம். சிலா் பல்லியைப் பார்த்தும் அப்படித்தான் செய்வோம். நீங்கள் நினைக்கலாம், பாம்பின் ஒரே நோக்கம் நம்மைக் கடிப்பதுதான் என்று. ஆனால் அது அப்படி அல்ல. உண்மையில் பாம்பு தெரியாமல் வந்து விட்டது. அது ஓடத்தான் பார்க்கும் கடிக்காது.

உங்களுக்குத் தெரியும் நீங்கள் பலமுள்ளவர்கள் என்று. ஆனால் அதை நாம் உணர்வதில்லை. ஏனென்றால் சத்தியத்தை நீங்கள் உங்கள் ஆழ்மனதிலே பெற்றுக் கொள்வதில்லை. எப்படி நீங்கள் கரப்பான் பூச்சியைக் கொல்ல முயற்சிக்கிறீர்கள்? நீங்கள் கொஞ்சம் கொஞ்சமாக அதைப் பார்த்து, அதைப்பற்றின உண்மைகளைத் தெரிந்த பிறகு, அதைக் கொல்லும்படி தைரியம் கிடைக்கிறது. எனக்கு திருமணம் ஆன புதிதிலே என் மனைவியின் சத்துரு கரப்பான் பூச்சிதான். கரப்பான் பூச்சி வந்த உடனே, பாம்பு வந்ததைப் போல ஒரு பெரிய சத்தம் வரும். அதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அவளுக்குத் தைரியம் வந்தது. ஏனென்றால் கரப்பான் பூச்சியின் எல்லை நமக்குத் தெரியும். சில கரப்பான் பூச்சிகள் பறக்கும், கொஞ்ச தூரம்தான் பறக்க முடியும். அது பறந்து உங்கள் மேல் உட்கார்ந்தால் கூட அது உங்களைக்

கடிக்காது. அதைப் பற்றி தெரிந்த உடனே நாம் அதை அடிக்க முயற்சிக்கிறோம். கொண்றுவிட்டு வாட்சப்பிலே போட்டோ எடுத்து அனுப்புகிறோம். ஏனென்றால் புதிதாக ஒன்றை நாம் செய்து விட்டோம். அந்தக் கரப்பான் பூச்சியைப் பற்றி அறிந்து கொண்ட பிறகுதான் அதை நீங்கள் எதிர்த்து நிற்க முடியும். வேதம் சொல்கிறது "தங்கள் தேவனை அறிந்தவர்கள் பராக்கிரமமுள்ளவர்கள்"

நான் ஏழாம்வகுப்பு படிக்கும்போது தருமபுரியில் உள்ள எனது வீட்டின் அருகில் ஒரு மண் குவியல் இருந்தது. ஒரு நாள் என் தந்தை வீட்டில் இல்லை. நான் பள்ளி முடிந்து வரும்போது என்னுடைய தாயார் கதவு பக்கத்திலே நின்று, ஒரு தேள் உள்ளது, அதை கொண்று விட்டு வா, என்று சொன்னார்கள். என்னுடைய முதல் கேள்வி, அது பறக்குமா?' என்று. அவர்கள் சொன்னார்கள், 'இல்லை'. இரண்டாவது கேள்வி,அது வேகமாக செல்லுமா?' என்று கேட்டேன். 'இல்லை, அது மெதுவாகத் தான் செல்லும்', என்று சொன்னார்கள். அது வாயினால் கொட்டினால் விஷம் எனவே கவனமாக இரு, என்று அவர்கள் சொன்னார்கள். இப்போது, அதால் என்ன செய்ய முடியும், என்ன செய்ய முடியாது என்று அதைப் பற்றி நான் தெரிந்து கொண்டேன். ஒரு காலணியைக் கொண்டு நான் அதைக் கொண்று விட்டேன். அது ஒரு பெரிய காரியமில்லை. அதன் வரையறை நமக்குத் தெரியும்.

***அறிக்கை செய்வோம்:***

*பரிசுத்த ஆவியானவர் அசுத்த ஆவியைக் கட்டுப்படுத்துகிறார்.*

பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள்ளே இருக்கிறவர், அசுத்த ஆவியை மட்டுப்படுத்துகிறார், கட்டுப்படுத்துகிறார், தடைசெய்கிறார். ஏனென்றால் அது ஒரு ஆவி. என்னுடைய சரீரத்தை விட அது வல்லமை உடையதுதான். ஆனால், நானும்

ஒரு ஆவி, மட்டுமல்ல பரிசுத்த ஆவியானவர் என்னுடைய ஆவியோடு இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் எனக்குள்ளே இருப்பவர், அதே ஆவி இந்த முழு உலகத்திலும் அசுத்த ஆவியை தடைப்படுத்தியவர், தடைபண்ணிக் கொண்டிருப்பவர். இது நமக்கு கராத்தே, குங்பு மற்றும் தற்காப்புக்கலைகள் தெரிந்தது போல. ஜாக்கிஜான் படங்களில் பார்த்திருப்போம், எதிராளியின் கையைப் பிடித்து கொஞ்சம் திருகின(ட்விஸ்ட் பண்ணின) உடனே அவன் விழுந்து விடுவான். ஏனென்றால் எங்கே பிடிக்க வேண்டுமென்று அவனுக்குத் தெரியும். வர்மக் கலை தெரிந்தவர்கள் சில இடங்களில் அழுத்தினால் எதிராளியை சுலபமாக வீழ்த்தி விடலாம்.

பரிசுத்த ஆவியானவர் அசுத்த ஆவியை ஒரு வர்மப் புள்ளியை வைத்து தடை செய்கிறார், வீழ்த்துகிறார். பரிசுத்த ஆவியானவர் அதை அறிந்து இருக்கிறார். அவர் உங்களுக்குள்ளே இருக்கிறார். அது உங்களுக்குத் தெரியும். தங்கள் தேவனை அறிந்தவர்கள், பெலன் உள்ளவர்கள் என்று சொல்லுங்கள். அவர் வல்லமையுள்ளவர். நீங்களும் வல்லமையுள்ளவர்கள் தான். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் வல்லமையுள்ளவர்கள் தான். நீங்கள் வல்லமையுள்ளவர்கள் மட்டுமல்ல. நீங்களும, நானும் ஒரு பல்லியை விட, கரப்பான் பூச்சியை விட, பாம்பை விட வல்லமையுள்ளவர்கள். நீங்கள் பலம் இல்லாமல் இருக்கும் போது உங்கள் வல்லமை பலன் இல்லாமல் இருக்கிறது. ஒரு பாம்பு வந்தால்கூட அதை நாம் சுலபமாக கொண்று விடலாம். உங்களுக்குள்ளே பயம் இருப்பதால், பெலன் இல்லாமல் அதைக் கண்டு நடுங்குகிறீர்கள்.

தங்கள் தேவனை அறிந்தவர்கள் பலமுள்ளவர்களாய், வல்லமையுள்ளவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் பராக்கிரமம் செய்வார்கள். அதாவது பெலன் இருந்தால்தான் வல்லமையோடு இருப்போம். நாம் இதைக்குறித்து தெளிவான எண்ணம் உடையவர்களாய், கவனமாய் வளர வேண்டும். சிலர் பல்லியைக்

கொல்வதற்கு துடைப்பத்தை பயன்படுத்துவீர்கள். அதை ஒரு குச்சியை வைத்து தலையில் குத்தி விட்டால் அது செத்து விடும் என்பது எனக்குத் தெரியும். நான் பலமுள்ளவனாயிருக்கிறேன், நான் ஓடுவதில்லை, நான் வித்தை எதுவும் பண்ணுவதில்லை. ஏன், நான் இந்த உதாரணத்தை சொல்கிறேன் என்றால், நாம் அதைப் பார்த்தால், ஒவ்வாமையோடு (அருவருப்பு) இருக்கிறோம். அதைப்போல் தான் சத்துருவும் நம்மில் சிலருக்கு அருவருப்பாயிருக்கிறான்.

**யோவான் 14:16 நான் பிதாவை வேண்டிக்கொள்வேன். அப்போது என்றென்றைக்கும் உங்களோடு கூட இருக்கும்படி பரிசுத்த ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்த சத்திய ஆவியானவரை காணாமலும், அறியாமலும் இருக்கிறபடியால், அவரைப் பெற்றுக் கொள்ள மாட்டாது. அவர் உங்களுடனே வாசம்பண்ணி, உங்களுக்குள்ளே இருப்பதனால் நீங்கள் அவரை அறிவீர்கள்.**

இயேசு சொல்கிறார்,“நான் சொல்கிறேன், உங்களுடனே இருக்கும்படி பரிசுத்த ஆவியானவரை அனுப்புகிறேன். நீங்கள் அவரைப் பெற்றுக் கொள்வீர்கள்”. நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். இயேசு மேலும் சொல்கிறார், ‘இந்த உலகம் அவரைப் பெற்றுக் கொள்ளாது. ஏனென்றால் அவர்கள் அவரைக் காணவில்லை’. நான் உலகம் என்று சொல்லும் போது, கிறிஸ்தவனையும் சேர்த்துதான் சொல்கிறேன். அநேக கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய விஷயங்களை புரிந்து கொள்வதில்லை. அவர்கள் மாம்சீகமாகவும், தர்க்கரீதியாகவும், உலக ஞானத்தின்படியும் இந்த வேதத்தை புரிந்து கொள்ள விரும்புகிறார்கள். அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லையென்றால், அது தவறு என்று சொல்லுகிறார்கள்.

ஆனால் வேதம் ஒரு விசுவாசப்புத்தகம். நீங்கள் விசுவாசிக்கும் போது தான் அதை அறிந்து கொள்ள முடியும்.

அதனால் தான் இயேசு சொல்கிறார் "நீங்கள் கண்டு விசுவாசிக்கவில்லை. விசுவாசித்ததைக் காண்கிறீர்கள்".இன்னொரு இடத்தில் சொல்கிறார், "நீங்கள் கண்காண்கிறபடி நடப்பதில்லை, விசுவாசத்திலே நடக்கவேண்டும்", என்று. நாம் மாம்சத்தில் கிரியை செய்கிறோம் மாம்சீகத்தின் சிந்தனையிலே, கிரியை செய்வதினாலே, ஆவியின் காரியங்களை நம்மால் பார்க்காமல், விசுவாசிக்க முடியவில்லை. இயேசு சொல்கிறார், "நீங்கள் விசுவாசித்து நடக்க வேண்டும். பார்த்து நடக்கக் கூடாது". மேலும் இயேசு சொல்கிறார், இந்த உலகம் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளாது. ஏனென்றால் அவர்களால் அதைப் பார்க்க முடியாது.

இன்னொரு கேள்வி என்னவென்றால், அவர்களால் இயேசுவைப் பார்க்க முடிந்தது. அவர்கள் அவரைப் பெற்றுக் கொண்டார்களா? அவரை அறிந்து கொண்டார்களா? இல்லை!. அவர்கள் அற்புதத்தைப் பெற்றுக் கொண்டார்கள். ஆனால், அவரைப் பெற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் இயேசுவைப் பார்த்து எப்படி இந்த அற்புதத்தை செய்கிறார் என்று கேட்ட போது, அவர்களை அவர் ஆவிக்குரிய உலகத்திலே இணைக்கும் போது, அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. "நான் ஆவிக்குரிய வாழ்க்கையின் ஒரு அங்கம்" என்று அவர் சொன்ன போது, மக்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. அவரிடமிருந்து அற்புதங்களை ஒரு வித்தையைப்போல, மாய மந்திரத்தைப்போல கற்றுக்கொள்ள ஆயத்தமாக இருந்தார்கள். அதற்கு மேம்பட்ட ஆவிக்குரிய காரியங்களைப்பற்றி அறிவிக்கும்போது அவைகளை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிட்டார்கள். இயேசுவையும் பொய்யரென்று ஒதுக்கிவிட்டார்கள். இப்போது, நாம் ஆவிக்குரிய விஷயம் பேசும் போது இந்த உலகம் நம்மை தள்ளி விடுகிறது. இயேசு சொல்கிறார்,"இந்த உலகம் அவரைப் பெற்றுக்

கொள்ளாது. ஏனென்றால் அவரை அவர்கள் பார்க்க முடியவில்லை. அவர்கள் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள்".

நாம் விசுவாசித்து நாம் அறிந்திருக்கிறோம். நாம் விசுவாசிக்கிறோம், அதன் பிறகு அறிந்திருக்கிறோம். அநேக கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கிறார்கள். அதோடு நிறுத்தி விடுகிறார்கள். அவர்கள் மனக்கண்களால் பார்ப்பதில்லை. அவர்கள் விசுவாச வார்த்தைகளைக் கேட்பதில்லை. இதில் என்ன நடக்கிறது? குருட்டு விசுவாசத்தோடு அவர்களால் இருக்க முடியாது. ஒரு குருட்டு விசுவாசத்தில் எவ்வளவு நேரம்தான் இருக்க முடியும்?. விசுவாசத்தில் நீங்கள் வளருகிறீர்கள். நீங்கள் முதலில் அறியவேண்டும், பிறகு பார்க்க வேண்டும், கேட்க வேண்டும். அதன் பிறகு செயல்படுத்த வேண்டும். இது ஒன்றுமே இல்லாமலிருக்கும் போது, ஒரு வெற்று கற்பனை விசுவாசத்தில் மட்டும் நீங்கள் வாழ முயற்சிக்கும் போது, உங்கள் விசுவாசத்திலே நீங்கள் தாக்குதல் பண்ணப்பட்டு நீங்கள் நிற்க முடியாது, இங்கு தான் நாம், அதாவது ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் வேறுபட்டு, வித்தியாசப்பட்டு நிற்கிறோம். சபை விசுவாசிக்கிறது. ஆனால் நாங்கள் அதை அறிந்து கொள்ள விரும்புகிறோம். தேவன் சொல்லுகிறார், "நீங்கள் என்னைத் தேடுகையில் என்னைக் கண்டடைவீர்கள்".

**லூக்கா 11:34 - கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது. உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்.**

முதலாவது நீங்கள் விசுவாசிக்க வேண்டும். விசுவாசம் வெளியரங்கமாய் இருக்க வேண்டும். கிரியை இல்லாத விசுவாசம்

செத்தது. உங்களுக்கு விசுவாசம் இருக்குமானால் ஏழைகளுக்கு உதவ வேண்டும். அது தான் நீங்கள் செய்கிற கிரியை என்று சொல்கிறார்கள். பரவாயில்லை, ஆனால் அதன் அர்த்தம் அதுவல்ல. விசுவாசம் வெளியரங்கம் ஆக வேண்டும். உங்கள் விசுவாசம் ஏதாவது ஒரு கிரியை செய்ய வேண்டும். நீங்கள் பேசுவது நல்லது தான். பவுல் சொல்கிறார், "நீங்கள் விசுவாசிக்கிறீர்கள், நீங்கள் பேசுகிறீர்கள், நீங்கள் பேசிக் கொண்டே இருக்கிறீர்கள். ஒரு கிரியையுமே இல்லை, ஆனாலும் என் கிரியை உங்களுக்குக் காண்பிக்கிறேன். அதன் பிறகு நாம் பார்ப்போம் யாருடைய விசுவாசம் பெரியது?"

விசுவாசம் நல்லதுதான். விசுவாசத்தின்படி தான் நீங்கள் தேவனிடத்தில் வருகிறீர்கள். விசுவாசத்திலேதான் தேவனுடைய காரியங்களை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள். பேசினால் மட்டும் போதாது. அது கிரியையிலே வளர வேண்டும். அது வெளியரங்கமாக வேண்டும். அது வெளியரங்கமாகவில்லை என்றால், உங்கள் விசுவாசம் சீக்கிரமாய் செத்துப் போகும்.

அப்படித்தான் அநேகருடைய விசுவாசம் கிரியைகளில்லாமல் செத்துப்போனது. அநேக வருடங்களுக்கு முன்பாக அவர்கள் நன்றாகத்தான் ஆரம்பித்தார்கள். சிலர் படிப்பு, வேலையை விட்டுவிட்டு கிராமத்திலே ஒரு சபையை ஆரம்பித்தார்கள். நீங்கள் நினைக்கலாம், கிராம ஊழியர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று. அநேக பாஸ்டர்கள் பெங்களூரில் கூட அப்படித்தான் இருக்கிறார்கள். கிராமம் என்றல்ல, நகரம் என்றல்ல, அது விசுவாசத்தின் கிரியை.

ஒரு நாள் அவர்கள் நன்றாகத்தான் ஆரம்பித்தார்கள். ஒரு ஆசையோடு, ஒரு அழைப்போடு, ஒரு வேட்கை, வாஞ்சையோடு அவர்கள் எதையெல்லாம் வேதாகமக் கல்லூரியில் கேட்டார்களோ, வல்லமையான தேவ ஊழியர்களிடம் கேட்ட வசனங்கள், தன்னுடைய வாழ்க்கையில் எதையெல்லாம் அவர்கள் செயல்படுத்த விரும்பினார்களோ, அது நடக்கவில்லை. அவர்கள்

கேட்கிறார்கள் விசுவாசிக்கிறார்கள் பேசுகிறார்கள், ஆனால் நடைமுறைக்கு வரவில்லை. ஒரு வருடம் ஆகிறது, இரண்டு வருடம் ஆகிறது. சபையில் ஒரு எழுச்சியோ, திருப்புமுனையோ இல்லை, ஒரு வளர்ச்சியுமில்லை, ஒரு பொருளாதார விடுதலையும் இல்லை, இப்போது என்ன செய்வது? இதுதான் சபையின் துக்கமான காரியம். விசுவாசத்தோடு தேவனிடத்தில் வருகிறவர்கள், உங்கள் விசுவாசத்தில் நீங்கள் பேசுகிறீர்கள். விசுவாசம் கிரியையிலே வர வேண்டும். எதோ ஒன்று, எதோ ஒரு இடத்திலே தவறு இருக்கிறது. அதைக் கண்டு பிடித்து, சரி செய்ய வேண்டும்.

***அறிக்கை செய்வோம்***:

*விசுவாசம் கிரியையிலே வெளிப்பட வேண்டும்.*

தேவன் சுகமளிக்கிறார் என்று பாடுவது நல்லது தான். தேவன் என்னுடைய அப்பா அவர் வேலைக் கொடுக்கிறவர் என்று பாடுவது எல்லாம் நல்லது தான். நீங்கள் சுகமளிக்கும் விடுதலையை நீங்கள் பார்க்காத வரைக்கும் எவ்வளவு அதிகமாய் நீங்கள் அதைப் பாடுவீர்கள்? கொஞ்ச நாள் முயற்சிக்கிறீர்கள். சில காலம் முயற்சிக்கிறீர்கள். பிறகு அதை விட்டு விடுகிறீர்கள். நீங்கள் இன்னமும் அறிக்கை செய்கிறீர்கள். ஆனால், உங்கள் உள்ளத்தின் ஆழத்தில் தெரியும். அது நடைமுறைக்கு வரவில்லை என்று. இன்னொரு நபர் எனக்கு சுகம் கிடைத்தது என்று சொல்லும் போது, நீங்கள் அவர் சும்மா சொல்கிறார் என்று நினைக்கிறீர்கள்.

அநேகர் என்னிடம் சொல்கிறார்கள், “நான் ஜெபித்தேன், நான் காணிக்கை கொடுத்தேன், நான் உபவாசித்து ஜெபித்தேன், என்னுடைய வாழ்க்கையிலே, ஒன்றுமே நடக்கவில்லை, யாரெல்லாம் தன்னுடைய சுகத்தையும், விடுதலையையும் சொல்கிறார்களோ அவர்கள் எல்லாம் பொய் சொல்கிறார்கள் என்று நினைக்கிறார்கள். அவர்கள் நல்லவர்கள் தான். அவர்கள் தீவிரத்தோடு தங்கள் அனுபவத்தைத் தான் சொல்லுகிறார்கள். நான் அவர்களை சமாதானம் பண்ண முயற்சிக்கும் போது,

அவர்களுடைய அனுபவம் வலுவாக இருக்கிறதினால் நான் அவர்களை சமாதானம் பண்ண முடியவில்லை. ஏனென்றால் அவர்கள் எதையெல்லாம் கேட்டார்களோ, எதையெல்லாம் அவர்கள் பேசினார்களோ, அதெல்லாம் நடைமுறைக்கு வருவதில்லை.

அருமையான சபையே, தேவன் உங்களோடு கூட பேசுகிறார். நீங்கள் விசுவாசத்தை கிரியையிலே நடைமுறைக்கு கொண்டு வருவீர்கள். நீங்கள் கேட்கிறவர்கள் மட்டுமல்ல. நீங்கள் செய்கிறவர்களுமாய் இருக்கிறீர்கள்.

**லூக்கா 11:35** ஆகையால் உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

உங்களுக்குள்ளே வெளிச்சம் இருக்கிறது. அது இருளாய் இருக்கக் கூடாது. இயேசு கர்த்தராய் இருக்கிறார். நமக்காக மரித்தார். அவர் சுகமளிக்கிறவர். அவர் விடுதலைக் கொடுக்கிறவர். இயேசுவின் மூலம் நான் செழிப்புள்ளவளாய் இருக்கிறேன். அவர் வெளிச்சமாய் இருக்கிறார். அந்த வெளிச்சம் அழிந்து போகாது. ஏனெனில் நீங்கள் இயேசுவை விசுவாசிக்கிறீர்கள். வெளிச்சம் உங்களை பரலோகத்திற்கு கொண்டு செல்லும், தேவனுடைய கிருபையின் மூலமாய். ஆனால், அந்த வெளிச்சம் இருளாகக்கூடும். அந்த வெளிச்சம் மங்கலாகக்கூடும். சில வேளை நான் பரலோகத்திற்குச் செல்வேன். இந்த உலகத்தின் செழிப்பு இல்லை, இருள்தான்! ஏன்? எல்லா விசுவாசத்தின் பிரசங்கத்தையும் நான் கேட்டிருக்கிறேன். எல்லா விசுவாசத்தையும் நான் அறிக்கை செய்திருக்கிறேன். நான் காணிக்கை கொடுத்தேன். நான் ஜெபித்தேன் நான் விசுவாசித்தேன். ஆனால் என்னுடைய செழிப்பை நான் பெற்றுக் கொள்ளவில்லை என்று சொல்லுகிறீர்கள். பாஸ்டர் எதையெல்லாம் தீர்க்கதரிசனமாகப் பேசுகிறார்களோ, அதை அடைத்து, அதின் வழியை மூடி விடுகிறீர்கள். நீங்கள் ஆமென், ஆமென் என்று சொல்கிறீர்கள்.

அது நடக்கிறதில்லை பாஸ்டர், நான் பரலோகத்திறகுச் செல்வேன் என்று நான் விசுவாசிக்கிறதினால் சபைக்கு வருகிறேன். ஆனால் அந்த இருள் அப்படியே இருக்கிறது.

**லூக்கா 11:36 - உன் சரீரம் ஒரு புறத்திலும் இருளடைந்திராமல், முழுவதும் வெளிச்சமாய் இருந்தால், ஒரு விளக்குத் தன் பிரகாசத்தினாலே வெளிச்சம் கொடுக்கிறது போல, உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாய் இருக்கும் என்றார்.**

இயேசு உங்கள் ஆவியை உங்கள் சரீரத்தோடு ஒப்பிடுகிறார். ஏனெனில் ஆவியைக் குறித்துப் பேசினால் நாம் அதைப் புரிந்து கொள்ள மாட்டோம். உங்கள் ஒவ்வொரு உறுப்புகளும் உங்கள் சரீரத்தில் வெளிச்சமாய் இருந்தால் அது முழுமையாக வெளிச்சமாய் இருக்கும். ஆனால் சில அவயவங்களில் இருள் இருந்தால் அது இருளாக இருக்கும். வெளிச்சம் இருக்கிறது. இருளும் இருக்கிறது. அப்படித்தான் நம்முடைய ஆவியும் இருக்கிறது. அப்படித்தான் உங்கள் விசுவாசமும் இருக்கிறது. அது முழுமையாக வெளிச்சமாய் இருந்தால், நீங்கள் முழுமையாக வெளிச்சமாய் இருப்பீர்கள். கொஞ்சம் இருள் இருந்தால், நீங்கள் இருளாகவே இருக்கிறீர்கள். அந்த இடத்திலே நீங்கள் வெளிச்சத்தைப் பெற்றுக் கொள்ள மாட்டீர்கள். இதை நீங்கள் வாஞ்சிக்கவேண்டும், தேவன் சொல்கிறார்,“நீங்கள் தேடினால் கண்டடைவீர்கள்”.

பழைய ஏற்பாட்டில், மனிதர்களோ தீர்க்கதரிசிகளோ அல்லது புத்தகத்தில் உள்ள நீதிபதிகளோ யாருக்கும் கடவுளுடைய ஆவியின் வெளிப்பாடு இல்லை. ஆதியாகமம் புத்தகத்தில் கூட, ஆபிரகாம் ஒரு நபராக கடவுளுடன் நடந்து கொள்வதைக் காண்கிறோம். ஆபிரகாம் கடவுளை ஒரு நபராகவோ அல்லது நண்பராகவோ கையாண்டார். ஆனால் பின்னர், அவர்கள் கடவுளை அறிந்திருந்தாலும்,

சிந்தனையாளருக்கு கடவுளின் சக்தி தெரியும்,கடவுளின் பெயரை 'எலோஹிம், யெகோவா' என்று அவர்கள் அறிந்திருந்தாலும், அவர்கள் கடவுளை அறியவில்லை.

தாவீது மற்றும் சாமுவேலுக்கு ஒரு ஆழமான வெளிப்பாடு இருந்தது. சாமுவேலின் முன்னோடி (ஆன்மீக தந்தை) ஏலியின் காலத்தில் ஒரு வெளிப்பாடும் இல்லை. கடவுளிடம் எப்படி ஜெபிப்பது, கடவுளை எப்படிப் பிரியப்படுத்துவது, ஆன்மீக சட்டங்கள் என்ன என்பது அவர்களுக்குத் தெரியாது.

இந்தச் சூழலில் நீங்கள் சொல்வதைக் கேட்டு பைபிளைப் படித்தால். நீங்கள் அதை தெளிவாக புரிந்துகொள்வீர்கள். இஸ்ரவேலர் போரில் தோல்வியடைந்த போது, அவர்கள் உடன்படிக்கை பெட்டியை போர்க்களத்திற்கு எடுத்துச் சென்றார்கள். உடன்படிக்கைபெட்டி அவர்களுக்கு விடுதலையைக் கொண்டு வரும் என்று நினைத்து அவர்கள் கொண்டாடினார்கள்,கூச்சலிட்டார்கள், கத்தினார்கள், வணங்கினார்கள்.

பெலிஸ்தர்கள் மேஜிக் பெட்டியைக் கைப்பற்றி தங்கள் கோவிலுக்கு எடுத்துச் சென்றார்கள். மந்திர பெட்டி என்பது உடன்படிக்கைபெட்டி.. தங்கள் மற்ற கடவுள்களின் மத்தியில் அவர்கள் இந்த உடன்படிக்கைபெட்டியை வைத்திருந்தார்கள். பெலிஸ்தர்கள் வந்து பார்த்தபோது, இந்த தெய்வங்கள் அனைத்தும் உடைந்து உடன்படிக்கைபெட்டியின் காலடியில் விழுந்தன.

மீண்டும் அடுத்த நாள் ஒவ்வொரு கடவுளும் மாய பெட்டியின் முன் விழுந்து உடைந்தன. எனவே இது மிகவும் சக்திவாய்ந்த பெட்டி என்று அவர்கள் நினைத்தார்கள். நாம் அதை இங்கே வைக்கக்கூடாது நாங்கள் அதை

இஸ்ரவேலருக்கு திருப்பி அனுப்புவோம். எப்படி என்று எங்களுக்குத் தெரியாது. அவர்களுக்கு உடன்படிக்கை பெட்டியை குறித்ததான வெளிப்பாடு இல்லாமல் இருந்தது.

ஆனால் இன்று அது நமக்குத் தெரியும். பல கிறிஸ்தவர்களுக்கு அது இன்றும் கூட தெரியாது. பலருக்கு, பரிசுத்த ஆவியின் நிறைவு என்பது, ஐந்து நிமிடங்களுக்கு அந்நிய பாஷைகளில் பேசுவது மட்டுமே. பின்னர் அவரை பெட்டியில் வைத்து பூட்டிவிடுகிறார்கள். அவ்வளவுதான். பலருக்கு வெளிப்பாடு இல்லை அல்லது தாய்மொழியில் பேசுவது பற்றி கூட தெரியாது. பத்து ஆண்டுகளாக தேவாலயத்திற்குச் செல்லும் மக்கள் கூட ஆன்மீக விஷயங்களைப் பற்றிய வெளிப்பாடு இல்லை. அவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தேவாலயத்திற்குச் செல்கிறார்கள்,ஏனென்றால் அவர்களுக்கு இது ஒரு பாரம்பரியம். ஆனால் ஆன்மீக உலகில் வளர முதல் படி பரிசுத்த ஆவியின் வெளிப்பாடு மற்றும் அந்நியபாஷயில் பேசுவது என்பது நமக்குத் தெரியும். ஆனால் அது போதாது.

உங்கள் அன்றாட வாழ்க்கையில் பரிசுத்த ஆவியின் வெளிப்பாட்டை நீங்கள் காண வேண்டும். உங்கள் வாழ்க்கையில் கடவுளை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். நாம் அதை விரும்ப வேண்டும்.

நீங்கள் அவரை நாடினால், நீங்கள் அவரைக் காண்பீர்கள். நீங்கள் அழைத்தால், அவர் பதிலளிப்பார். வாஞ்சையோடு தேவனைத் தேடுங்கள்,

கர்த்தர் நம் வாழ்வில் வெளிப்படுவார்.

# உங்களுக்கான தேவ திட்டத்தை ஆவிக்குள்ளாக அறிந்து கொள்ளுங்கள்

ஒரு முக்கியமான செய்தியை உங்களோடு பகிர்ந்து கொள்ள வாஞ்சிக்கிறேன். முந்தைய பகுதியில் வாஞ்சை மற்றும் எதிர்பார்ப்பு ஆகியவை அதிசயத்தைக் கொண்டு வரும் என்று பார்த்தோம். நமக்கு சரீரம், ஆத்துமா, ஆவி இருக்கிறது. நாம் சரீரத்திலே வாழ்கிறோம். நமக்கு ஒரு ஆத்துமா இருக்கிறது. நாம் ஒரு ஆவியாய் இருக்கிறோம்.

நான் ஒரு ஆவி. ஒரு ஆத்துமாவோடு சரீரத்திலே வாழ்கிறேன். ஆண்டவர், என் சரீரத்தை சிருஷ்டிக்கவில்லை. என் ஆவியை சிருஷ்டித்தார். ஆண்டவர் என் சரீரத்தை உருவாக்கினார். ஆண்டவர் என்னை சிருஷ்டித்து எனக்கென்று ஒரு சரீரத்தை உருவாக்கினார்.

சங்:139:13

நீர் என்னுடைய சிந்தையைக் கைக்கொண்டிருக்கிறீர், என்னுடைய தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர்.

ஒன்றுமில்லாததிலிருந்து நம்முடைய ஆவி சிருஷ்டிக்கப்பட்டது. உருவாக்குகிறவர் ஏற்கனவே எனக்குள் இருக்கிறார். அதை வைத்து நம்மை உருவாக்கினார். நான்(அதாவது என் சரீரம்) என் தாயின் கர்ப்பத்திலே உருவாக்கப்பட்டேன். ஆனால் என்னை ஒரு ஆவியாக கர்த்தர் சிருஷ்டித்தார்.

ஆண்டவர் என்னை ஒரு ஆவியாக சிருஷ்டித்த போது, ஒரு நோக்கத்தை என் ஆவியிலே கொடுத்திருக்கிறார். என்னுடைய வாழ்க்கையின் நோக்கம் என் சரீரத்தில் இல்லை. என் ஆத்துமாவிலும் இல்லை. என் ஆவியிலே இருக்கிறது. எனக்கென்று கர்த்தர் என்ன உண்டாக்கினாரோ அதை கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை,இருதயத்தில் தோன்றவுமில்லை.

**1கொரிந்தியர் : 2:9**

எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மேல் அன்பு செலுத்துகிறவர்களுக்கு ஆயத்தம் செய்தவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனிதனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.

ஆனால் தேவன் அதை நம்முடைய ஆவியிலே வெளிப்படுத்தியிருக்கிறார். ஆகையால் நம்முடைய ஆவிதான் நம்முடைய நோக்கத்தை எடுத்துச் செல்கிறது. நாம் இந்த உலகத்திலே ஒரு ஆவியாக வாழ வேண்டும். அதைத்தான் வேதத்திலே ஆவியில் நடத்தப்படுதல் என்று வாசிக்கிறோம்.

**ரோமர்:8:14**

மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியானவராலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய குமாரர்களாக இருக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டு புஸ்தகத்திலே அப்போஸ்தலர் நடபடிகளில், ஆவியில் நடத்தப்படுவதையும், ஆவியினால் நிரப்பப்படுதலையும் பார்க்கிறோம். நாம் இந்த உலகப்பிரகாரமான சரீரத்தில் வாழ்ந்தாலும் கூட, நாம் சரீரத்தின் படி வாழாமல் ஆவியில் என்ன இருக்கிறதோ அதைப் பெற்றுக் கொள்ளும்படி வாழ வேண்டும் என பவுல் எழுதுகிறார். ஆவியிலே வாழ வேண்டுமானால், நம்முடைய ஆவி என்ன சொல்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அநேக நாட்களில் நம்முடைய சரீர அறிவின்படி தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆவியில் அதற்கான அறிவு தனியாக இருக்கிறது. ஆவியின் அறிவுக்கு நாம் பழகிக் கொள்ள வேண்டும். அது என்ன சொல்கிறது என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும். நாம் யோசிக்கிறபடி அல்ல. நாம், 'ஆண்டவரே இதை செய்யுங்கள், அதை செய்யுங்கள்' என்று கேட்பதைத் தான் ஜெபம் என்று நினைத்துக் கொள்கிறோம். இப்படித்தான் பழைய ஏற்பாட்டின் காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

சர்வவல்ல தேவன் நம்மை ஆட்கொள்ளும் (நம் மேல் ஆட்சி செலுத்தும் அதாவது நம்மை பரிபாலிக்கும்) முறைகள் மூன்று வகையானது. முதலில் இருந்தது மனசாட்சியின் காலம். அதன் பிறகு நியாயப்பிரமாணத்தின் காலம். இப்பொழுது இருப்பது கிருபையின் காலம். நியாயப்பிரமாணத்தின் காலத்தில் பரிசுத்த ஆவியானவர் அந்த நபருக்கு மேலே இருந்தார். அவனுக்குள் இல்லை. கிருபையின் காலத்திலே, ஆண்டவருடைய கிருபையினால் நாம் சுத்திகரிக்கப்பட்டு, ஆவியானவர் நமக்குள் இருக்கிறார். பரித்த ஆவியானவர் நமக்குள் இருப்பதனால்,ஆண்டவரே இதை செய்யுங்கள் என்று கேட்க வேண்டிய அவசியம் இல்லை. 'பரிசுத்த ஆவியானவர் உனக்குள்ளே இருக்கிறார், உனக்கு வேண்டிய அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறேன்', என்று ஆண்டவர் சொல்கிறார். அதனாலே இதை செய்யும், செய்யும் என்று கேட்காமல், 'நீயே போய் செய்' என்று ஆண்டவர் சொல்கிறார்.

ஒருமுறை கப்பல் கடலில் அலைகளினால் தள்ளாடும் போது, சீடர்கள் ஆண்டவரிடத்தில் எதையாவது செய்யும் என்று சொன்னார்கள். அதற்கு இயேசு இதை நீங்கள் செய்திருக்க வேண்டும் என்று சொன்னார். கிருபையின் காலத்திலே ஆண்டவர் நமக்குள் இருக்கிறார். நமக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்.

**மாற்கு : 4: 36-41**

36 அவர்கள் மக்களை அனுப்பிவிட்டு, அவர் படகில் இருந்தபடியே அவரைக் கொண்டு போனார்கள். வேறு படகுகளும் அவர்களோடு இருந்தது.

37 அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி, படகு நிரம்பும் அளவிற்கு, அலைகள் படகின்மேல் போதியது.

38 இயேசு, கப்பலின் பின்பக்கத்தில் தலையணையை வைத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி: போதகரே, நாங்கள் மரித்துப்போவதைப்பற்றி உமக்கு கவலை இல்லையா? என்றார்கள்.

39 அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து: இரையாதே, அமைதலாய் இரு என்றார். அப்பொழுது காற்று நின்று போய், மிகுந்த அமைதி உண்டானது.

40 அவர் அவர்களைப்பார்த்து: ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போனது என்றார்.

41 அவர்கள் மிகவும் பயந்து: இவர் யாரோ? காற்றும் கடலும் இவருக்குக் கீழ்படிகிறதே என்று, ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

ஜெபம் என்றால், ஆண்டவருடைய பிரசன்னத்தில் அமர்ந்திருப்பது. பிரசன்னத்தை அனுபவிக்கும் போது, உங்கள் ஆத்துமாவும், சரீரமும் அடங்கும். அப்பொழுது நம்முடைய ஆவி பெலப்படும். அது எழுப்பப்படும். உங்கள் ஆவிக்குரிய மனிதன் இயேசுவின் ஆவியோடு இணைக்கப்பட முடியும். அப்பொழுது ஆண்டவர் ஆவியில் என்ன சொல்கிறார் என்பதைப் புரிந்து கொள்வீர்கள். அதினால்தான் நீங்கள் ஒரு மணி நேரம் அந்நிய பாஷையிலே ஜெபிக்க வேண்டும். அந்நிய பாஷையிலே ஜெபிக்கும் போது, யாரையும் குற்றம் சொல்லவில்லை, உதவி கேட்கவில்லை, எதையும் ஆண்டவரிடம் அறிவிக்கவில்லை.

நம்முடைய ஆவியை நாம் பெலப்படுத்தி, நம்முடைய ஆவிக்குரிய மனிதனை இன்னும் பெலப்படுத்துகிறோம். அப்பொழுது நீங்கள் பலமுள்ள மனிதனாக நடத்தப்படுவீர்கள். நீங்கள்தான் ஆவி. உங்களுடைய ஆவி பெலப்படும் போது, உங்கள் ஆவியில் ஆண்டவர் என்ன வைத்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்வீர்கள். உங்கள் சரீரம் பெலப்பட்டு இருக்குமானால், சரீரத்திலே நடத்தப்படுவீர்கள். உங்கள் ஆவி

பெலப்பட்டிருக்குமானால் ஆவியில், நடத்தப்படுவீர்கள். ஆவியிலே நடத்தப்படுகிற மனிதன் ஜீவனைப் பெற்றுக் கொள்வான். நீங்கள் ஆவியில் நடத்தப்பட்டால் அதிசயங்களைக் காண்பீர்கள்.

**ஆதியாகமம் : 26:12-22**

12. ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான் கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான்

13. அவன் ஐசுவரியவானாகி, வரவர விருத்தியடைந்து, மகா பெரியவனானான்.

14. அவனுக்கு ஆட்டுமந்தையும், மாட்டுமந்தையும், அநேக பணிவிடைக்காரரும் இருந்தபடியினாலே பெலிஸ்தர் அவன் பேரில் பொறாமைகொண்டு,

15. அவன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் அவனுடைய வேலைக்காரர் வெட்டின துரவுகளையெல்லாம் தூர்த்து மண்ணினால் நிரப்பிப்போட்டார்கள்.

16. அபிமெலேக்கு ஈசாக்கை நோக்கி: நீ எங்களை விட்டுப் போய்விடு எங்களைப் பார்க்கிலும் மிகவும் பலத்தவனானாய் என்றான்.

17. அப்பொழுது ஈசாக்கு அவ்விடம்விட்டுப் புறப்பட்டு, கேராரின் பள்ளத்தாக்கிலே கூடாரம் போட்டு, அங்கே குடியிருந்து,

18. தன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் வெட்டினவைகளும், ஆபிரகாம் மரித்தபின் பெலிஸ்தர் தூர்த்துப்போட்டவைகளுமான துரவுகளை மறுபடியும் தோண்டி, தன் தகப்பன் அவைகளுக்கு இட்டிருந்த பேர்களின்படியே அவைகளுக்குப் பேரிட்டான்.

19. ஈசாக்குடைய வேலைக்காரர் பள்ளத்தாக்கிலே வெட்டி, அங்கே சுரக்கும் நீரூற்றைக் கண்டார்கள்.

20. கேராரூர் மேய்ப்பர் இந்தத் தண்ணீர் தங்களுடையது என்று சொல்லி, ஈசாக்குடைய மேய்ப்பருடனே வாக்குவாதம்பண்ணினார்கள் அவர்கள் தன்னோடே வாக்குவாதம்பண்ணினபடியால், அந்தத் துரவுக்கு ஏசேக்கு என்று பேரிட்டான்.

21. வேறொரு துரவை வெட்டினார்கள் அதைக்குறித்தும் வாக்குவாதம்பண்ணினார்கள் ஆகையால் அதற்கு சித்னா என்று பேரிட்டான்.

22. பின்பு அவ்விடம்விட்டுப் பெயர்ந்துபோய், வேறொரு துரவை வெட்டினான் அதைக்குறித்து அவர்கள் வாக்குவாதம்பண்ணவில்லை அப்பொழுது அவன்: நாம் தேசத்தில் பலுகும்படிக்கு, இப்பொழுது கர்த்தர் நமக்கு இடம் உண்டாக்கினார் என்று சொல்லி, அதற்கு ரெகொபோத் என்று பேரிட்டான்.

ஈசாக்கு விதை விதைத்தான், அவன் நூறு மடங்கு அறுவடை செய்தான் என்று வேதத்தில் பார்க்கிறோம். ஒரு சாதாரண மனிதன் விதைக்கும்போது நூறத்தனையான ஆசிர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஈசாக்கு பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுவதினாலே முட்டாள்தனமான(உலகத்தின் பார்வைக்கு) ஒரு காரியத்தைச் செய்கிறான். ஈசாக்கினால் செய்ய முடிந்தது. ஏனென்றால் அவன் பரிசுத்தஆவியினால் நடத்தப்பட்டான்.

சிம்சோன் பரிசுத்த ஆவியினாலே நடத்தப்பட்டான். அவன் பெரிய காரியங்களை எல்லாம் செய்தான். அவன் ஆண்டவரோடு இருந்த உடன்படிக்கையை உடைத்து விட்டான். அதினால் ஆண்டவருடைய அபிஷேகத்தை இழந்து விட்டான். அபிஷேகம் என்றால் அப்போது ஆண்டவருடன் இருந்த தொடர்பு. அந்த

அபிஷேகத்தை அவன் இழந்ததினாலே, அவன் தோற்றுப் போனான். அவன் கண்கள் பிடுங்கப்பட்டது. சில நாட்கள் கழித்து, அவன் தலைமுடி மீண்டும் முளைத்த உடன் அந்த உடன்படிக்கை மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. உடன்படிக்கை மீண்டும் புதுப்பிக்கப்பட்ட உடனே, “ஆண்டவரே எனக்கு மீண்டும் ஒரு வாய்ப்பைக் கொடுங்கள், நான் என்ன செய்ய வேண்டுமோ அதை நான் செய்வேன்” என்று கேட்கிறான்.

சிம்சோனுக்கு ஒரு குற்ற மனசாட்சி இருந்தது. அவன், ‘நான் வாழத்தகுதி இல்லாதவன், நான் சாக வேண்டும்’,என்று நினைத்துக் கொண்டான். சிம்சோன் நானும் இந்த ஜனங்களோடே மரித்துப் போக வேண்டுமென்று சொல்லி அந்த ஜனங்களோடே மரித்துப் போனான். என்னுடைய நோக்கத்தை நான் நிறைவேற்றட்டும் என்று சிம்சோன் மனதார ஆண்டவரிடத்தில் கேட்காவிட்டால், அவன் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றாமலே இறந்திருப்பான். உங்கள் நோக்கம் உங்களுக்குள் தான் இருக்கிறது. நாம் அதை புரிந்து,அதை அறிந்து, அதை ஏற்றுக் கொள்ளாத வரைக்கும் நாம் அதை நிறைவேற்ற முடியாது. நாம் மரிக்கும் போதுதான் நமக்கென்று இருந்த தேவ திட்டத்தை நிறைவேற்றவில்லை என்பது நமக்குத் தெரிய வரும்.

**ஏசாயா 61:1,2**

1. கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார் சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார் இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்,

2. கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும்,

கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர், என்மேல் இருக்கிறார். இது பழைய ஏற்பாடு. இப்பொழுது கர்த்தர் எனக்குள் இருக்கிறார் என்று சொல்ல முடியும். ஆவியின் நோக்கம் என்னவாக இருந்தது? தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருப்பதற்கான நோக்கம் என்ன? அவர் என்னை அபிஷேகம் பண்ணி, என்னை அவரோடு இணைத்துள்ளார். அவர் சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிஷேசத்தை அறிவிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார். எனக்குத் தெரியும் நான் அபிஷேகம் பண்ணப்பட்டேன் என்று. ஆனால், நான் எதற்காக அபிஷேகம் பண்ணப்பட்டேன் என்பதை அறியாமல் இருந்தால் நான் உபயோகமற்றவனாயிருப்பேன்.

மற்றவர்களோடு நாம் வாழ்கிறோம். மற்றவர்கள் மாதிரி பேசுகிறோம் மற்றவர்கள் மாதிரி அழுகிறோம். மற்றவர்கள் மாதிரி சண்டை போடுகிறோம். இரவு ஜெபம், ஞாயிற்றுக் கிழமை ஆராதனை, அந்நிய பாஷையில் பேசுகிறோம். ஆனால் அபிஷேகம் பண்ணப்பட்டதின் நோக்கம் என்ன? கர்த்தருடைய ஆவியானவர் நமக்குள் ஒரு நோக்கத்திற்காக இருக்கிறார். அபிஷேகம் கிடைத்து பத்து வருஷம் முடிந்து விட்டது. ஆனாலும் ஒரு உபயோகமும் இல்லை. மற்றவர்களைப் போலவே நீங்கள் வாழுகிறீர்கள். ஏனென்றால் உங்கள் நோக்கத்தை நீங்கள் இன்னும் அறிந்து கொள்ளவில்லை. நான் அறிந்து கொண்டேன். அவர் சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிஷேசத்தை அறிவிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார். அபிஷேகம் பண்ணப்பட்டது சுவிஷேசம் சொல்வதற்காக மட்டுமல்ல.

தாவீது ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான். அவன் மேய்ப்பன். சிறு பையன். வீட்டிலே கடைசி பையனான அவனை யாரும் ஒரு பொருட்டாக எண்ணவில்லை. ஆனால் அவன் தேவனோடு இணைந்திருந்தான். அவன் அபிஷேகம் பண்ணப்பட்டான். தாவீதின் அபிஷேகத்தின் நோக்கம் என்ன? அவன் இராஜ்ஜியத்தை அரசாளும்படி, பெலிஸ்தியர்களை

அசைக்கும்படி,கோலியாத்தைக் கொல்லும்படி, இஸ்ரவேல் தேசத்தை உலக வரை படத்தில் இடம் பெறச்செய்ய, தன் சகோதரர்களுக்கு உணவு கொண்டு சென்ற போதிலும், அவன் தன் மேல் இருந்த நோக்கத்தை அறிந்திருந்தான்.

உங்கள் நோக்கத்தை(அழைப்பை) நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். நீங்கள் சாதாரணமாக ஒரு அலுவலகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாலும், நீங்கள் அபிஷேகம் பண்ணப்பட்டதின் நோக்கத்தை நீங்கள் அறிவீர்களானால், வாய்ப்பு கிடைக்கும் போது நீங்கள் கோலியாத்தை விட மாட்டீர்கள். அநேகருக்கு மாயையான ஒரு தாழ்மை இருக்கிறது. உங்கள் அழைப்பை நீங்கள் அறிந்து கொள்ளும் போது, வாய்ப்பு வரும் போது, நீங்கள் முழு அதிகாரத்தோடு எதிர் கொள்வீர்கள். தேவனுடைய ராஜ்ஜியம் பலவந்தம் பண்ணப்பட்டிருக்கிறது. பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதை சுதந்தரிப்பார்கள்.

உங்கள் பதவி உயர்வை அடுத்தவர்களின் பரிதாபத்தின் அடிப்படையிலே எதிர்பார்காதீர்கள். எனக்குள் கர்த்தர் கொடுத்திருக்கிறார் என்ற உரிமையோடு போங்கள். ஆண்டவர் எனக்குக் கொடுத்திருக்கிறார் என்ற அதிகாரத்தோடு போக வேண்டும்.

**அறிக்கை:** *நான் சிறுமைப்பட்டவனுக்கு சுவிஷேசத்தை அறிவிக்கப் போகிறேன் ஏனென்றால் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். எனக்கு பதவி உயர்வு கிடைக்கும். ஏனென்றால் தேவனுடைய அபிஷேகம் என் மேல் இருக்கிறது. நான் கோலியாத்தை கொல்வேன் ஏனென்றால் நான் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறேன். நான் அக்கினியில் நடப்பேன். தேவனுடைய வல்லமை என்னிலிருந்து வெளிப்படும். ஏனென்றால் நான் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறேன்.*

சில பேர் ஆண்டவர் என்னை பதவி உயர்வுக்கு இழுத்துக் கொண்டு செல்வார் என்று நினைத்துக் கொள்கிறீர்கள். அது ஒரு

போதும் நடக்காது. நீங்கள் புரிந்து கொண்டால் மட்டும்தான் அது நடக்கும். ஆண்டவரே நான் ஒன்றுமில்லை. எனக்கு பெலனில்லை என்று நினைத்துக் கொண்டிருந்தீர்களென்றால் அங்கேயேதான் இருப்பீர்கள். உங்களைக் குறித்த நோக்கம் உங்கள் ஆவியில் இருக்கிறது. வேதம் எப்படி இருக்க வேண்டும்? என்ன செய்ய வேண்டும் என்று ஒரு வரைபடத்தை தெளிவாகக் காட்டுகிறது.

**சங் 23:4**

4. நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன் தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர் உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.

ஆண்டவர் உங்களோடு கூட இருக்கிறதினால் நீங்கள் சாக மாட்டீர்கள். நீங்கள் வெற்றியோடு இருப்பீர்கள். நீங்கள் ஜெயிப்பீர்கள். அக்கினியில் நடந்தாலும் அது உங்களை சேதப்படுத்தாது.

போராடி ஜெயித்தவர்கள் பற்றி நிறைய எடுத்துக்காட்டு வேதத்தில் இருக்கிறது. உங்கள் தீர்மானத்தை அடைவதற்கான ஒரு வழிகாட்டி வேதம். ஆனால் உங்களைக் குறித்த நோக்கம், ஆவியில் இருக்கிறது. உங்களைக் குறித்த சொந்தப் பாடத்தை, நீங்கள் எழுதுவீர்கள். நீங்கள் அபிஷேகம் பண்ணப்பட்டதினால், நீங்கள் அலுவலகத்தில் முதன்மை அதிகாரி ஆவீர்கள்.

கர்த்தருடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார். எலக்ட்ரானிக் சிட்டி முழுவதையும் நான் சுதந்தரித்துக் கொள்வேன். என்னை அபிஷேகம் பண்ணியிருக்கிறார். நான் கையிட்டுச் செய்வதெல்லாம் வாய்க்கும். நான் பத்தாயிரம் முதலீடு செய்து, ஒரு லட்சம் பெற்றுக் கொள்வேன். ஒரு லட்சம் இருந்தால் அதை முதலீடு செய்து ஐந்து லட்சம் பெற்றுக் கொள்வேன். ஏனென்றால் அது என்னைக்குறித்த தேவதிட்டம். இது எல்லாருக்கும் அல்ல.

மொர்தேகாயைக் குறித்த தேவதிட்டம் காவலாளி அல்ல. இராஜாவின் வலது பக்கத்தில் அமர்ந்திருப்பது. சோதனைக் காலத்தின்போது அவன் புலம்பவில்லை. அவன் அதிகாரத்திலே இயங்கினான். தேவதிட்டமானது மொர்தகாயின் ஆவியில் இருந்தது. ஆனால் அவனுடைய ஆவியிலே அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அவனுக்கும் சாவுக்கும் பதினைந்து நாள் தான் இருந்தது. அவனுடைய சாவு இராஜாவின் மோதிரத்தினால் முத்திரை போடப்பட்டிருந்தது. அடுத்த மாதம் பதினைந்தாம் தேதி நிசான் மாதத்திலே மொர்தகாயின் குடும்பம் முழுவதும் அழிக்கப்படும்.

மொர்தகாயின் நோக்கம் ஆமான் கட்டின தூக்கு மரத்தில் தொங்கும்படியாக அல்ல. அவனுடைய நோக்கம் பதினைந்து நாளில் சாகும்படியாக அல்ல. அவனைக் குறித்த தேவதிட்டம் ராஜாவின் வலது பாரிசத்தில் உட்காருவது. அவன் யெகோவாவின் ஆவியோடு இணைக்கப் பட்டிருந்தான். அவன் உபவாசித்து ஜெபித்துக் கொண்டிருந்தான். அவனுடைய சரீரமும் ஆவியும் ஆண்டவருடைய ஆவியோடு இணைந்திருந்தது. அவன் சில வார்த்தைகளைப் பேசினான். அப்புறம் சில திட்டங்களைத் தீட்டினான்.

நீங்கள் அனுப்பப்பட்டிருந்தால் அந்தத் திட்டம் உங்களுக்குள் இருக்கிறது. மற்றவர்களைப் போல அவனும் ,"நாம் சாகப் போகிறோம், சாகப் போகிறோம்" என்று சொல்லியிருக்கலாம். ஒருவேளை விட்டுக் கொடுத்து தோல்வியை ஒப்புக் கொண்டிருக்கலாம். அவனுக்குள் ஒரு திட்டம் இருந்தது. ஒரு திட்டம் தீட்டி வேலையைத் துவங்கினான். அந்த திட்டம் நடைபெறுமா? அந்த திட்டம் தோற்றுப் போகுமா? ஒரு வேளை அந்த திட்டத்தினால் இறந்து விடுவோமா? என்று அவன் நினைக்கவில்லை.

வழியில் சிங்கம் இருக்கும் என்று சொல்லி சோம்பேறி வீட்டிற்குள் படுத்துக் கொள்வான் என்று நீதிமொழிகள் சொல்கிறது. நம்மில்

அநேகர் சிங்கத்தை நாமே உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். ஏனெனில் நம்முடைய ஆவியில் என்ன இருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ளவில்லை. நமக்கு விரோதமாய் ஒரு பூதத்தை நாமே உருவாக்கி அதற்கு விரோதமாக சண்டைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். உங்கள் அழைப்பு என்ன என்று உங்களுக்குத் தெரியவில்லை.

அநேக கிறிஸ்தவர்களை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் அழைப்பு பெரியதாக இருக்கும். அவர்களிடம் சொன்னால் கூட அவர்களை ஊக்குவிப்பதற்காக நான் அதைச் சொல்கிறேன் என்று நினைத்துக் கொள்ளவார்கள். சின்னச் சின்னக் காரியங்களுக்காகப் பிரச்சினை பண்ணிக் கொண்டிருப்பார்கள். நீங்கள் குருடாக்கப்பட்டிருக்கிறீர்கள்.

பத்து வருடம் கழித்து உங்களுக்குத் தெரியும். என்னுடைய அழைப்பிலே நான் நடத்தப் பட்டிருந்தால் இதெல்லாம் ஒரு கொசு மாதிரி போய் இருக்கும். ஒரு கொசுவை சாகப்படிதற்கு நீங்கள் உபவாசித்து ஜெபிப்பீர்களா? இன்றைக்கு சபை அதை செய்து கொண்டிருக்கிறது. இந்த கொசுவைக் கொல்லுங்கள் என்று சொல்லி சுவிஷேசகர்களும், தீர்க்கதரிசிகளும் மாறி மாறி ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். கொசுவைப் பார்த்து ஒரு அடி கொடுத்தால் அது செத்து விடும். ஆனால் உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் ஒரு கொசுவைப் பற்றி பேசிக் கொண்டிருப்பீர்கள். உங்கள் கண் கொசுவிலே இருக்கும் போது உங்கள் இரத்த அழுத்தம் கூடும்.

தார்வாட் பல்கலைக்கழகத்திற்கு கல்லூரிப் போட்டிகளினிமித்தம் சென்றிருக்கும்போது, கல்லூரி விடுதியில் தங்கியிருந்தேன். அங்கே இருந்த பங்க் படுக்கைகளில் என்னோடு கூட ஒரு டான்சர் தூங்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது நிறைய கொசு இருந்தது. அவர் எழுந்து சத்தமாக கத்தி அந்த கொசுவை விரட்டிக் கொண்டிருந்தார். மறுபடியும் தூங்கிக் கொண்டிருக்கும் போது எழும்பி அந்த கொசுக்களை கொல்லாமல் நான் தூங்க மாட்டேன்

என்று சொல்லி, அதை விரட்டிக் கொண்டிருந்தார். கொஞ்ச நேரம் கழித்து நான் அவரை வெளியே அனுப்பி விட்டேன். நீங்க வெளியே போய் தூங்குங்கள் நானும் தூங்க வேண்டும் என்றேன். அவர் இரவு முழுவதும் தூங்கவில்லை, ஆதலால் அடுத்த நாள் நடனம் ஆடமுடியவில்லை, அதுவும் தனி ஆள் ஆட்டம். அவருக்கு பரிசு கிடைக்கவில்லை. அதற்கு காரணம் அந்த கொசுதான்.

இது தான் கிறிஸ்தவ வாழ்க்கையிலே நடந்து கொண்டிருக்கிறது. நாளைக்கு நாம் என்ன செய்ய வேண்டும். நம்முடைய அழைப்பு என்ன, நம்முடைய நோக்கம் என்ன என்பதை நாம் மறந்துவிடுகிறோம். சின்ன சின்ன காரியங்களுக்காக நாம் நேரத்தை வீணடிக்கிறோம். சவுல் ராஜா இராஜ்ஜியத்தை ஆளும்படியாகத் தெரிந்துக் கொள்ளப்பட்டார். ஆனால் இரண்டோ அல்லது மூன்றோ போர் தான் அவர் நடத்தினார்.

அநேக சமயம் தாவீதை, அந்த சின்ன பையனைப் பிடிக்கும் படியாக சவுல் காட்டிற்குள் அலைந்து திரிந்தான். தாவீது யார்? ஒரு மேய்ப்பனான சின்ன பையன் ஒரு கல்லைப் போட்டு கோலியாத்தை கொன்றான். அது தான் தாவீதின் கதை. ஆனால் சவுல் ராஜா தான் அந்தக் கதையை பெரிதாக்கி விட்டார். அவர் வாழ்நாள் முழுவதும் ஒரு சின்ன பையன் பின்னால் சுற்றிக் கொண்டு வாழ்க்கையை வீணடித்து விட்டார்.

**அறிக்கை:** *அவர் என்னை அபிஷேகம் பண்ணி இருக்கிறார். ஒரு நோக்கத்திற்காக. அவர் என்னை அனுப்பினார். அவர் என்னை அனுப்பும் போது, நான் கேட்பேன். என்னுடைய அசைண்மென்டை நான் ஏற்றுக் கொள்வேன். நான் அதை நிறைவேற்றுவேன்.*

**அறிக்கை:** *பரிசுத்த ஆவியானவர் என்னுடைய தலைவர் அல்ல, என் துணையாளர்.*

பரிசுத்த ஆவியானவர் உங்கள் மேல் அதிகாரம் செலுத்துகிற லீடர் அல்ல, உங்களுக்கு துணையாக உடனிருக்கும் கைடு. இது தான் உண்மை. பரிசுத்த ஆவியானவர் என்னுடைய வழிகாட்டி.

இருதயம் நொறுங்குண்டவர்களை காயம் கட்டும்படி சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையைக் கொடுக்கும்படி அவர் என்னை அனுப்பி இருக்கிறார். ஆண்டவர் என்னை விடுதலையாக்கும்படி அனுப்பியிருக்கிறார். யார் அதை செய்வார்கள்? நான் அதை செய்வேன்.

நெகேமியாவை ஆண்டவர் ஒரு நோக்கத்தோடு அனுப்பினார். எருசலேமின் சுவரைக்கட்டும்படி நெகேமியாவை ஆண்டவர் அனுப்பினார். இப்பொழுது நெகேமியா ஒரு பானபாத்திரக்காரனாய் இருக்கிறான். அவனுடைய விருப்பம், ஏக்கம் அந்த சுவரைக் கட்டும்படியாக. நெகேமியாவை அந்த நோக்கத்திற்காக கர்த்தர் அனுப்பினார். அவர் உபவாசித்து ஜெபித்தார். அவருடைய மனமுழுவதும் அந்த சுவரைக் கட்டுவதிலிருப்பதால் அவர் சோகமாக இருந்தார். ராஜா அவனைப் பார்த்து ஏன் சோகமாக இருக்கிறாய்? என்று கேட்டவுடனே அவனுக்கு பயம் உண்டாயிற்று. அவன் ஆண்டவரிடம் ஜெபித்து விட்டு அவனுடைய பிரச்சினை என்னவென்று சொல்கிறான்.

இப்போது பரிசுத்த ஆவியானவர் இராஜாவின் இருதயத்தில் பேசினார். அழைப்பு இருக்கிறது, தெரிந்து கொள்ளுதல் இருக்கிறது, ஆனால் பயமாயிருக்கிறது என்றால், இராஜா ஒத்துக் கொள்வாரா என்று சொல்லிக் கொண்டிருந்தால் நீங்கள் முன்னேற மாட்டீர்கள். அவன் ஒரு ஸ்டெப் எடுத்தான். அது ராஜாவுக்கு விரோதமானது. ஏனெனில் அந்த சுவரை ராஜாவின் தகப்பன் தான் இடித்துப் போட்டார். உங்கப்பா தான் இடித்து போட்டார். காசு கொடு இப்பொழுது கட்டலாம் என்று கேட்பது போலிருக்கிறது. ஆனால் தேவன் அந்த இடத்திலே இடைப்பட்டார். உனக்குத் தங்கம், வெள்ளி என்ன வேண்டுமோ எடுத்துக் கொண்டு போ என்று ராஜா சொன்னார்.

இப்பொழுது நெகேமியா காட்டிற்குள் செல்கிறார். அந்த வழியே காட்டிற்குள் தான் இருக்கிறது. நான் என் தேவனைக் குறித்து மிகப் பெரியதாக என் ராஜாவினிடத்தில் சொல்லியிருக்கிறேன்.

அதினால் ராஜாவிடம் போய் நான் காட்டிற்குள் போகிறேன் எனக்கு பாதுகாப்பு கொடுங்கள் என்று சொன்னால் நன்றாக இருக்காது. பாதுகாப்பு இருக்கிறது நல்லது தான் ஆனால், ஆண்டவருடைய மிஷனில் நான் போகிறேன். என்னுடைய ராஜாவைக் குறித்து நான் பெரியதாக பேசியிருக்கிறேன். எனவே பாதுகாப்புக் கொடுங்கள் என்று கூறினால் அது ஆண்டவருக்கு வெட்கத்தை உண்டாக்கும். என்னுடைய ஆண்டவர் என்னைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. நெகேமியா அந்த காட்டு வழியாகச் சென்றான்.

அவன் எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்திக் கொண்டான். ஆண்டவர் அவனை அனுப்புகிறார். அவன் அங்கே சென்ற போது எதிரிகள் அதை கட்டவிடவில்லை. அவர்கள் எல்லாரும் யூதர்கள் தான் ஆனாலும் அந்த சுவரைக் கட்டவிடவில்லை. அந்த சுவர் எங்கே உடைந்திருக்கிறது என்பதைப் பார்க்கக்கூட அவன் பகலில் போக முடியவில்லை. அவர்கள் வந்து சண்டை போட ஆரம்பித்து விடுவார்கள். அவன் இரவுதான் அதை செக் பண்ண போக வேண்டியிருந்தது. அவனும் அவனுடைய கழுதையும் மட்டும் போனார்கள். அவன் நெடுஞ்சாலையில் போகவில்லை. நடுராத்திரியில் காட்டிற்குச் செல்கிறான். ஆண்டவர் அனுப்புகிறார்.

நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை புரிந்து கொள்ளாத வரைக்கும் எதாவது ஒன்றை சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஏனெனில் உங்கள் அழைப்பு உங்களுக்குத் தெரியாமல் இருக்கிறது. நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் என்னுடைய அழைப்பு என்னவென்று எனக்குத் தெரியும், நான் கடந்து செல்வேன். என்னுடைய ஆவியிலே இருக்கிற வெளிச்சம் என்னை நடத்திக் கொண்டு செல்கிறது. நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்திருக்கிறீர்கள். உங்கள் அழைப்பு என்னவென்று உங்களுக்குத் தெரியும்.

# ஆசீர்வாதம் என்றால் என்ன?

மத்தேயு18:20

ஏனெனில் இரண்டுபேராவது, மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்".

தேவனை ஆராதிப்பது என்பது மேன்மையானது. கடவுளின் வார்த்தை சொல்வது போல், அவர் நாமத்தினால் இரண்டு அல்லது மூன்றுபேர் எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே அவர் இருக்கிறார், அதாவது தேவனின்ஆவி அந்த இடத்தை ஆளுகிறது. தேவன்ஒரு ஆவியாய் இருக்கிறார் என்பதால் நாம் ஆராதிக்கும்போது அவர் நமக்குள் வாழ்கிறார். அவருடைய அதிகாரம் நம்மைப் பலப்படுத்துகிறது.

ஆசீர்வாதம் என்றால் என்ன?

இந்த மாம்சமான உலகில், நாம் ஆசீர்வாதமாக இருக்க விரும்புகிறோம். நீங்கள் விரும்பியதைச் செய்யவும், ஆசீர்வாதம் பெறவும் அதிகாரம் தேவை. இங்கே விரிவாகக் கூற இரண்டு விஷயங்கள் உள்ளன. இந்த பாடம் இரண்டு நபர்களைக் கொண்டுள்ளது. நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்களோ அதைச் செய்ய நீங்கள் ஒருவரால் அங்கீகரிக்கப்படவேண்டும், உங்கள் தேவையை பூர்த்தி செய்ய யாராவது உங்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும்.

நாம் அனைவரும் பணம் சம்பாதிக்க விரும்புகிறோம், நீண்ட காலம் வாழவேண்டும், திருமணம் செய்து கொண்டு குழந்தைகளைப் பெற விரும்புகிறோம். ஆனால், நம்மால் அதைச் செய்ய முடியாமல் போகலாம். நீங்கள் கடுமையாக முயற்சி செய்தாலும் அது நடக்காமல் போகலாம். இதனால்

தான் நீங்கள் ஒரு அதிகாரத்துடன் இணைய வேண்டும், எனவே அந்த அதிகாரத்தின் மூலம் நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்களோ அதைச் செய்யலாம். இந்த அதிகாரம் “தேவன்" அல்லது "ஆவி" என்று அழைக்கப்படுகிறது.

ஒவ்வொரு மதமும் அதிகாரத்திற்கு வெவ்வேறு பெயர்களைப் பயன்படுத்துகின்றன. அவர்கள் வெவ்வேறு ஆவிகளைப் பின்பற்றுகிறார்கள். நாம் "இயேசு" என்று அழைக்கப்படும் ஆவியைப் பின்பற்றுகிறோம். ஆகவே, நம்முடைய வாழ்க்கையில் தலையிடும்படி இயேசுவின் ஆவியிடம் நாம் கேட்க வேண்டும். இதனால் நாம் என்ன செய்ய விரும்புகிறோமோ அதைச் செய்ய நமக்கு அதிகாரம் கிடைக்கும்.

ஆசீர்வாதங்கள் நம் வாழ்வில் வெளிப்படுவதற்கு, " நாம்" மற்றும் "ஆவி" ஆகிய இரண்டும் ஈடுபட வேண்டும். ஆவி நமக்கு அதிகாரம் அளிக்கும் போது, நாம் செய்ய வேண்டியதை, செய்ய விரும்புவதை, நம்மால் செய்ய முடியும். அதை நாம் ஆசீர்வாதம் என்று அழைக்கிறோம்.

ஒரு மாயை அல்லது ஒரு போலியான விஷயம் உள்ளது, அதில் மக்கள் தொடர்ந்து செயல்படுகிறார்கள். கடவுள் தங்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள், ஆனால் அவர்கள் எதை பெற்றுக்கொள்ள விரும்புகிறார்கள், எது ஆசீர்வதிக்கப் படவேண்டும் என்று அவர்களுக்குத் தெரியாது. இருந்தாலும் "ஆண்டவரே என்னை ஆசீர்வதியுங்கள்” என கண்மூடித்தனமாக சொல்கிறோம்.

ஆசீர்வதிக்கப்படுவதற்கு, முதலில் நீங்கள் விரும்புவதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். இரண்டாவது விஷயம் நீங்கள் அவரிடம் நம்பிக்கையுடன் கேட்க வேண்டும். இயேசுவின் ஆவியால் உங்களுக்காக அதைச் செய்ய முடியும்

என்று நம்புங்கள். வேதாகமம் கூறுகிறது, "நீங்கள் செய்ய வேண்டியதைச் செய்ய அவர் உங்களுக்கு அதிகாரம் அளிக்கிறார்" . ஆசீர்வாதங்கள் கடந்து வந்து நம்வாழ்வில் அற்புதங்கள் நடைபெற அதிகாரம் கொடுக்கப்பட்டு இருகிறது. உங்களுக்கு என்ன வேண்டும் என்று தெரியாவிட்டால் அதை உங்களால் பெறமுடியாது. நீங்கள் நினைக்கலாம், எனக்கு என்ன வேண்டும் என்று தெரியும் ஆனால், உங்கள் இதயதத்திற்கு உண்மையில் என்னவேண்டும் என்று தெரியுமா

**மாற்கு 10: 46-52**-ல் படித்தோம்

46 - பின்பு அவர்கள் எரிகோவுக்கு வந்தார்கள். அவரும் அவருடைய சீஷர்களும் திரளான ஜனங்களும் எரிகோவைவிட்டுப் புறப்படுகிறபோது, திமேயுவின் மகனாகிய பர்திமேயு என்கிற ஒரு குருடன், வழியருகே உட்கார்ந்து, பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான்.

47 - அவன் நசரேயனாகிய இயேசு வருகிறாரென்று கேள்விப்பட்டு: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிடத்தொடங்கினான்.

48 - அவன் பேசாதிருக்கும்படி அநேகர் அவனை அதட்டினார்கள். அவனோ: தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான்.

49 - இயேசு நின்று, அவனை அழைத்து வரச்சொன்னார். அவர்கள் அந்தக் குருடனை அழைத்து: திடன்கொள், எழுந்திரு, உன்னை அழைக்கிறார் என்றார்கள்.

50 - உடனே அவன் தன் மேல் வஸ்திரத்தை எறிந்துவிட்டு, எழுந்து, இயேசுவினிடத்தில் வந்தான்.

51- இயேசு அவனை நோக்கி: நான் உனக்கு என்னசெய்யவேண்டும் என்றிருக்கிறாய் என்றார். அதற்கு அந்தக் குருடன்: ஆண்டவரே, நான் பார்வையடையவேண்டும் என்றான்.

52 - இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். உடனே அவன் பார்வையடைந்து, வழியிலே இயேசுவுக்குப் பின்சென்றான்.

பார்வையற்ற மனிதர் பர்திமேயு இயேசுவைச் சந்திக்க வந்த போது, அவர் குணமடைய விரும்பினார் என்பது புரிகிறது. ஆனால், இயேசு அவரிடம், "நான் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்?" என்று கேட்டார். இயேசு எல்லோரையும் குணப்படுத்தியதிலிருந்து இது நகைச்சுவையாக இருக்கிறதா? இது சரியான கேள்வி அல்ல என்று நீங்கள் நினைக்கலாம். குருடர் இயேசுவிடம், "ஆண்டவரே எல்லோரும் எனக்கு ஐந்து ரூபாய் தருகிறார்கள், எனவே தயவு செய்து எனக்கு ஐம்பது ரூபாயைக் கொடுங்கள்? என்று கேட்டிருந்தால் அவர் கொடுத்திருப்பார், அவருக்கு அது தேவை என்பதால் பணம் கேட்பது தவறல்ல. பர்திமேயஸ் அவருக்கு நல்ல உணவைக் கொடுக்கக் கேட்டிருந்தால், அவர் கொடுத்திருப்பார். பதிலுக்கு சிக்கன் பிரியாணி கிடைத்திருக்கும். அவர் இயேசுவுடன் பேசுவதால் அவருக்கு என்ன வேண்டும் என்று அவருக்குத் தெரியும் என்று நினைக்கிறீர்களா?

எல்லோரும் ஒன்று அல்லது இரண்டு ரூபாய் நாணயத்தை மட்டும் கொடுக்கும் இடத்தில் நான் ஒரு நொண்டியாக உட்கார்ந்து பிச்சை எடுக்கிறேன் என்று கற்பனை செய்து பாருங்கள். யாராவது ஒரு பிளேஸர் உடையில் வந்து

"உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று என்னிடம் கேட்டால், நான் அவருக்கு ஐம்பது ரூபாயைக் கொடுக்கச் சொல்வேன். ஒருவேளை முகேஷ் அம்பானி வந்தால் நான் அவரிடம் ஒரு பைக் அல்லது மூன்று சக்கரவண்டியைக் கேட்கலாம். அநேகமாக அவர் எனக்கு ஒரு பைக்கைக் கொடுப்பார். அவ்வளவுதான் அவர் எனக்காகச் செய்ய முடியும். ஆனால் நான் என் கால்களை குணமாக்க அம்பானியிடம் கேட்டால் என்னைச் சுற்றியுள்ளவர்கள் சொல்வார்கள், நீங்கள் நொண்டி மட்டுமல்ல, பைத்தியக் காரரும் கூட என்று.

ஆனால், இயேசு வந்து, "எனக்கு ஒரு காரைக் கொடுங்கள்" என்று கேட்டால், நீங்கள் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளீர்கள் என்று சுற்றியுள்ளவர்கள் சொல்வார்கள். துரதிர்ஷ்டவசமாக இது தான் உண்மை, ஏனென்றால் பிரச்சினை மக்களின் மனநிலையுடன் உள்ளது. நாங்கள் அம்பானியிடமிருந்து ஒரு காரைக் கேட்டு இயேசுவிடம் ஐம்பது ரூபாயைக் கேட்போம் என்று நினைக்கிறார்கள், இது தான் உண்மை. நம் கடவுள் எவ்வளவு பெரியவர் என்பதை உணருங்கள். கடவுள் உங்களை எவ்வளவு நேசிக்கிறார், நீங்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று எவ்வளவு விரும்புகிறார் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அதனால் தான், குருடனிடம், "நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?" என்று இயேசு கேட்டபொழுது அந்த குருடர் ஒரு புதிய ஜோடி ஆடைகளைக் கேட்டிருந்தால், அவர் பெற்றிருக்கலாம், ஆனால் அவர் தன் தேவையை அறிந்து ஏசுவிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டார். ஆசீர்வாதம் என்பதில் கடவுளின் பங்கு மட்டுமல்ல நம்முடைய பங்கும் உள்ளது.

நாம் வழக்கமாக கடவுளிடம் ஒரு உதவி, அதிசயம் அல்லது நிதி முன்னேற்றம் போன்றவைகளுக்ககாக ஜெபிக்கிறோம். கற்பனை செய்து பாருங்கள் ,இயேசு உங்கள் முன் தோன்றி உங்களிடம் கேட்க்கிறார் "உங்களுக்கு பணம் வேண்டுமா?

என்று நீங்களும் ஆம் என்று கேட்கிறீர்கள். மேலும், நான் எவ்வளவு கொடுக்க வேண்டும், எப்படி உங்களுக்கு பணம் கொடுக்க வேண்டும்? என்று அவர் கேட்டால் உங்களிடம் உள்ள திட்டம் என்ன? உங்களிடம் ஏதேனும் பதில்கள் இருக்கிறதா? உங்களிடம் பதில் இல்லை, ஒரு வாரத்திற்குப் பிறகு உங்களைச் சந்திக்கும்படி இயேசுவிடம் கூறுவீர்கள், பின்னர் நீங்கள் ஒரு திட்டத்துடன் தயாராக இருப்பீர்கள். இதற்கு நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா? நம்மை ஆசீர்வதிக்கும்படி நாம் கடவுளிடம் கேட்கிறோம், ஆனால் அவர் வந்து "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்கும் போது நம்மிடம் பதில்கள் இல்லை. இது தான் இன்று தேவாலயத்தின் பிரச்சினை. நாங்கள் எதிர்பார்க்கவில்லை, ஆனால் குணப்படுத்தினார்.

மாற்கு6.5-ல் வசனம்கூறுகிறது, நாங்கள் அழுது கொண்டே இருக்கிறோம்.

தொழு நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் இயேசுவைச் சந்திக்கச் சென்றார். இயேசு கேட்டார், "நான் உன்னை குணமாக்க முடியும் என்று நீ நம்புகிறாயா?" அவர் நம்பியதால், இயேசுவிடம் வந்தார் என்று நினைக்கிறீர்களா? இல்லை. இயேசு மிகவும் சக்திவாய்ந்தவர், அவரையும் அவரது அற்புதங்களையும் யாராலும் தடுக்கமுடியாது. ஆனாலும், இயேசு கேள்வி எழுப்பினார், ஏனென்றால் நாம் நம்பும் போது தான் குணமடையமுடியும். இயேசு தன்னைக் குணப்படுத்த முடியும் என்று அந்த தொழுநோயாளி ஒப்புக் கொண்டார்.

இயேசு மிகவும் சக்தி வாய்ந்தவரா என்று நீங்கள் கேட்கலாம், அவர் அந்த கிராமத்தில் பிறந்து வளர்ந்தாலும் ஏன் அற்புதங்களைச் செய்ய முடியவில்லை? பல வருடங்களுக்குப் பிறகு இயேசு அந்த கிராமத்திற்குச் சென்ற போது, அவரைச் சுற்றியுள்ளவர்கள் இயேசுவை “யோசேப்பின் குமாரன்” என்று பார்த்தார்கள், அவர்கள் அவரைச் சுற்றி ஓடும் ஒரு சிறு

பையனாகப் பார்த்தார்கள். மக்கள் அவரை ஒரு அதிசய ஊழியராக பார்க்கவில்லை. அவர்கள் இயேசுவை ஒரு சாதாரண மனிதராகவும் அவர்களில் ஒருவராகவும் பார்த்தார்கள்.

சடங்குகள் அல்லது நிர்ப்பந்தங்களுக்காக மட்டுமே நாம் தவறாமல் தேவாலயத்திற்குச் செல்கிறோம், நம் வாழ்வில் எந்த மாற்றத்தையும் காணவில்லை அல்லது எந்த அதிசயத்தையும் பெறவில்லை. நம் இதயத்தில் எதிர்பார்ப்பும் விருப்பமும் இல்லை, ஏனென்றால் நம்மால் நம்ப முடியவில்லை. நாம் அனைவரும் நம் குழந்தைப் பருவத்திலிருந்தே இயேசுவை அறிவோம். எங்கள் தாத்தா, பாட்டி மற்றும் பெற்றோரை நாங்கள் பார்த்திருக்க வேண்டும், அவர்கள் ஜெபித்திருப்பார்கள், ஆனால் எதையும் பெறவில்லை. இயேசு எதையும் செய்யமாட்டார் என்று நீங்கள் நினைக்கலாம். வேதாகமத்தில், நிறைய அற்புதங்கள் நடந்தன என்று நாம் நினைக்கலாம். ஆனால் இப்போது வாழ்க்கையில் எதுவும் நடக்காது. போதகர் சொல்லிக் கொண்டே இருக்கிறார், ஆனால் எதுவும் நடக்காது. இன்றைய வாழ்க்கையில் பல கிறிஸ்தவர்களுக்கு இருக்கும் கருத்து இதுதான். நீங்கள் அந்த அணுகுமுறையில் இருந்தால், நீங்கள் எதையும் பெறமாட்டீர்கள்.

**அறிக்கைசெய்வோம்: நீங்கள் எதிர்பார்த்தால், நீங்கள் அதைப் பெறுவீர்கள்.**

நீங்கள் தேவாலயத்திற்குச் செல்ல தொடங்குவதற்கு முன், உங்கள் வீட்டில் மண்டியிட்டு 10-15 நிமிடங்கள் ஜெபிக்கவும். "ஆண்டவரே, நான் ஆலயத்திற்குச் செல்கிறேன், என் போதகர் பிரார்த்தனை செய்கிறார், பிரசங்கிக்கிறார், நாங்கள் பாடும் போது நீங்கள் என்னைத் தொடவேண்டும் என்று விரும்புகிறேன், என்னில் ஒரு மாற்றம் இருக்க வேண்டும், நான்

உங்கள் முன்னிலையில் இருக்கப் போகிறேன், நான் குணமடைவேன் ".என்று நீங்கள் பிரார்த்தனை செய்து, தேவாலயத்திற்கு வரவேண்டும் , நான் வெறுமையாக திரும்பி வரமாட்டேன் என்ற மனப்பான்மையுடன் இருக்குமேயனில் நீங்கள் வெறுமையாக திரும்பிச் செல்லமாடீர்கள்.

குஷ்டநோயால் பாதிக்கப்பட்டவர், இயேசு தனது கிராமத்திற்கு வருவதாகக் கேள்விப்பட்ட போது, அந்த குஷ்டரோகி எல்லோரிடமும் என் குஷ்டரோகத்தை கடைசியாக பார்த்துக் கொள்ளுங்கள் என்றார்.அவரைச் சுற்றியுள்ள அனைவரும், "ஏன்?" என்று கேட்டார்கள். அவர் இயேசுவைச் சந்திக்கப் போவதாகவும், திரும்பி இதே தோற்றத்துடன் வரமாட்டேன் என்றும் அவர்களிடம் சொன்னார். இயேசு அவரிடம் "நான் உங்களுக்காக இதைச் செய்யமுடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா? என்றார் " அவர் "ஆம், நான் இந்தநாளுக்காக காத்திருந்தேன்" என்றார்.

சங்கீதம் 122: 1 ல் தாவீது கூறுகிறார்

"கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்குஅவர்கள் சொன்ன போது மகிழ்ச்சியாயிருந்தேன்.

தாவீது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார், ஏனென்றால் அவர் வெறுமனே திரும்பி வரமாட்டார் என்று அவர் அறிந்திருந்தார். நான் சென்றால், நான் ஏதாவது பெறுவேன். இந்த அணுகு முறையே உங்களை கர்த்தரிடமிருந்து பெற வைக்கிறது. உங்களுக்கு அந்த எதிர்பார்ப்பு இல்லையென்றால், நீங்கள் ஆலயத்திற்கு வந்தும் வெறுமனே திரும்பிச் செல்வீர்கள்.

உங்கள் வாழ்க்கையைப் பற்றி உங்களுக்கு ஒரு விருப்பம் அல்லது திட்டம் இருக்கும் வரை, எதுவும் மாறாது. ஒரு மாற்றத்திற்காக அவரைத் தேட ஆரம்பிக்க, இறைவன் உங்கள்

கண்களைத் திறக்க வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். நீங்கள் விரும்பும் மற்றும் எதிர்பார்க்கத் தொடங்கும் போது, நீங்கள்அதைப் பெறுவீர்கள். பலர் எதிர்பார்ப்பதில்லை!

சில நேரங்களில், அவர்கள் போதகர் பிரார்த்தனை செய்ய வேண்டும் என விரும்புகிறார்கள். ஆனால் அவர்கள் ஜெபத்தில் கவனம் செலுத்துவதில்லை. நீங்கள் எதிர்பார்ப்பது போல, ஆசைப்படுவது போல, மெதுவாக விஷயங்கள் உங்கள் வாழ்க்கையில் மாறும். தேவாலயம் என்பது எதிர்பார்ப்பு மற்றும் விரும்புவது

**யோவான் 15: 7 நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.**

இந்த வசனத்தில் முக்கிய சொல்"விருப்பம்". உங்கள் இதயத்தில் ஏங்குகிற ஆசை, உங்கள் விருப்பம் உங்களுக்கு நடக்கும். அவர் உங்களுக்கு ஒரு உதவியாளரைக் கொடுப்பார். இந்த வார்த்தையுடன் நான் உங்களுடன் பேச வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்.

**யோவான் 14: 16-20**

**16 - நான் பிதாவை வேண்டிக் கொள்வேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.**

**17 - உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.**

**18 - நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்.**

**19 - இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்.**

**20 - நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்.**

இயேசு இந்த உலகில் ஒரு மாம்சமாக இருந்தார். இயேசு சிலுவையில் அறையப்பட்டார், அவர் நமக்காக தனது உயிரைக் கொடுத்தார். ஆனால் மீண்டும், அவர் ஒரு ஆவியாக திரும்பி வந்தார். இப்போதும் இயேசு இங்கே இருக்கிறார், ஆனால் ஒரு ஆவியாக. அவர் சதை இல்லாததால் நீங்கள் அவரைப் பார்க்க முடியாது. இயேசுவின் ஆவி நம்முடன் இருக்கிறது. அவர் நம் ஆவியின் மூலம் நம்முடன் இணைக்கப்பட்டுள்ளார்.

இதை வேதாகமத்திலிருந்து விளக்கலாம். “பரிசுத்த ஆவியானவர்” , “தேவனுடைய குமாரனின் ஆவி” , “இயேசுவின் ஆவி” அனைத்தும் ஒன்று தான். ஆனால் பயன்படுத்தப்படும் பொதுவான சொல் “பரிசுத்த ஆவியானவர்” . கடவுள் ஒரு ஆவியானவர், ஆவிக்குரிய ரீதியில் குற்றம் சாட்டப்பட்ட ஒரே இடம் தேவாலயம் மட்டுமே. ஆவிக்குரிய அபிஷேகம் நம்மை உள்ளே இருந்து மாற்றுகிறது.

வேதாகமத்தில், இயேசு கூறுகிறார், "நான் போவேன், உங்களுக்கு வேறொரு ஆவியை அனுப்பும்படி பிதாவிடம் கேட்பேன்."

**யோவான் 14:16 நான்பிதாவை வேண்டிக் கொள்வேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட**

**இருக்கும் படிக்குச்சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்**.

நீங்கள் தேவாலயத்திற்கு வருகிறீர்கள், இதனால் நீங்கள் உள்ளே இருந்து பலப்படுவீர்கள். ஆவியுடன் இணைக்கபடும் போது நீங்கள் விஷயங்களை வேறுபரிமாணத்தில் பார்க்கத் தொடங்குவீர்கள். இதுதான் உண்மை. கடவுளின் ஆவி என்னும் மழையில் நீங்கள் நனைந்து கொண்டே இருக்கும் போது, நீங்கள்ஆன்மீக ரீதியில் குற்றம் சாட்டப்படுவீர்கள். நீங்கள் ஆவியுடன் தொடர்பு கொள்ளும் போது, விஷயங்கள் உங்களில் மாறத் தொடங்கும்.

ஆவி பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது? அவர் உங்கள் உதவியாளர். ஆவிக்குரிய உலகில், ஒரு வழக்கம் உள்ளது. நாம் இரண்டு கால்களால் நடக்கிறோம் .ஒரு நீச்சல் குளம் இருந்தால், நீங்கள் நடக்க முடியாது; நீங்கள் அதில் நீந்த வேண்டும். நீங்கள் வானத்தில் செல்லும் போது, நீங்கள் நடக்க முடியாது, நீந்தவும் முடியாது. விதிகள் மற்றும் ஈடுபாடுகள் வேறுபட்டவை. அதுபோலவே, ஆவிக்குரியஉலகில், பின்பற்ற வேண்டிய வழி முறைகள் உள்ளன. நாம் வழிமுறைகளை அறிந்து அவற்றைப் பயன்படுத்த வேண்டும். அப்போது தான் அது செயல்படும். உங்கள் தாத்தாவின் கதையை நீங்கள் கற்பனை செய்து ஆவிக்குரிய உலகில் செயல்பட முடியாது.

இயேசு உங்களுடன் இருக்கிறார். அவர் உங்களை ஒரு போதும் விட்டு விடமாட்டார். அவர் எப்போதும் உங்களுடன் இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் உங்கள் உதவியாளர். நீங்கள் அதை கருத்தரிக்க முடியாவிட்டால், நீங்கள் அதைப் பெறமாட்டீர்கள். அவர் உங்கள் உதவியாளராக இருப்பதால், திட்டம் உங்களுடையதாக இருக்க வேண்டும்.

**யோவான் 14:20 நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்.**

நீங்கள் சிறப்பாக ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். இயேசு தந்தையுடன் இருக்கிறார், அவர் என்னிடத்தில் இருக்கிறார், நான் அவருடன் இருக்கிறேன். நான் இயேசுவிலும், இயேசு தந்தையிலும் இருக்கிறார், அதாவது இயேசு என்னுடன் இருக்கிறார். இயேசு என் ஆவியில் இருக்கிறார். இயேசு ஆதாமின் ஆவியுடன் இணைந்திருந்தார். ஆனால் ஆதாம் பாவம் செய்த போது, இயேசுவின் ஆவி ஆதாமிலிருந்து துண்டிக்கப்பட்டது. இப்போது ஆதாமின் ஆவி இறந்துவிட்டது. நாம் இயேசுவை நம்பிய போது, அவருடைய ஆவி நமக்குள் வந்திருக்கிறது. எனவே அவர் நம்மில் வாழ்கிறார்.

இந்த உலகில் ஏராளமான ஆவிகள் உள்ளன. அவைகளை அனைவரும் கடவுள் என்று அழைக்கிறார்கள். மக்கள் அவைகளை வணங்குகிறார்கள். வேதாகமத்தின் படி, அவைகள் இருண்ட ஆவிகள். அவைகள் நம் ஆவியுடன் இணைய முடியாது. இயேசுவால் மட்டுமே மனித ஆவியுடன் இணைய முடியும். இயேசு மட்டுமே அறிந்த கடவுச் சொல்லால் மனித ஆவி மூடப்பட்டுள்ளது. அந்த ஆவிகள் உடலிலும் ஆன்மாவிலும் ஆதிக்கம் செலுத்துகின்றன. அவர்களின் உடலும் மனமும் ஆவியால் முழுமையாகக் கைப்பற்றப்படும். ஆனால் இயேசு நமக்குள் வரும் போது அன்பும் சமாதானமும் இருக்கிறது. இயேசு ஒரு உதவியாளராக நம்முடன் இருக்கிறார். உங்கள் திட்டத்தை இறைவனிடம் எடுத்துச் செல்லுங்கள், அவர் ஒரு உதவியாளராக இருக்கிறார். நீங்கள் கடவுளை விரும்பினால், நீங்கள் அவரை நாடினால், உங்களில் ஒரு மாற்றத்தை விரும்பினால், அவர் தனது வழிகளை உங்களுக்குக் கற்பிப்பார். நீங்கள் விரும்பினால் மட்டுமே அவர்

உங்களுக்குக் கற்பிப்பார். நீங்கள் சாப்பிட வேண்டும் என்று ஹோட்டலுக்குச் செல்கிறீர்கள். நீங்கள் சிகிச்சை பெற வேண்டும் என்று மருத்துவமனைக்குச் செல்கிறீர்கள். ஆனால் மக்கள் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் அப்படியே தேவாலயத்திற்கு வருகிறார்கள்.

உங்களுக்கு ஆசை இருந்தால், நீங்கள் பெறுவீர்கள். இயேசு உயிருடன் இருக்கிறார். அவர் பேசுகிறார், கேட்கிறார், நம்முடன் பழகுகிறார், அவர் சக்திவாய்ந்தவர். அவர் நம்மை ஆசீர்வதித்து நம்மை கட்டியெழுப்புவார். அவர் நம்மை பலப்படுத்துவார். அவர் நம்மை கன்மலையின் மேல் வைப்பார். அவர் நம்மை உலகிற்கு ஒரு சாட்சியாக மாற்றுவார். பெரிய விஷயங்களை எதிர்பார்க்கத் தொடங்குங்கள், நீங்கள் அதைப் பெறுவீர்கள்.

## பயமுறுத்தும் கனவுகளிலிருந்து விடுதலை

மினி ஐசக்.

என் பெயர் மினி ஐசக். நான் ஆரக்கிள்(Oracle) நிறுவனத்தில் பதினொன்று வருடங்களாக வேலை செய்கிறேன். எனக்குத் திருமணமாகி மூன்று குழந்தைகள் உள்ளனர். என்னுடைய கனவில் பாம்புகள் வந்து வேதனைப் படுத்தின. வாழ்க்கையில் தேவன் தந்த விடுதலையை சாட்சியாக அறிவிக்கிறேன். நான் பெங்களுரில் ஒரு மெதடிஸ்ட் குடும்பத்தில் பிறந்து சிறுவயது முதலே, தெய்வபயத்தோடு வளர்ந்தேன். சண்டே ஸ்கூல், மற்றும் யூத் சர்ச்சில் பங்கு பெறுவேன். என்னுடைய கல்லூரி நாட்களில் கனவில் பாம்பு வடிவிலான பிசாசு வந்து பைபிள் வாசிக்காதே, தேவனை நம்பாதே என்று சொல்லுவான். ஆனாலும் நான் தேவனைப் பின்பற்றி அவருடைய வழிகளில் நடந்தேன். இரண்டு வாரத்திற்கு ஒரு முறை இது போன்ற கனவு எனக்கு வரும் சிலவற்றை என்னுடைய நாட்குறிப்பில் எழுதி வைத்துள்ளேன். கடந்த 18 வருடங்களாக இந்த வேதனையை சகித்து வந்தேன். அது எவ்வளவு கொடுமை என்றால், ஒருமுறை நான் எட்டாவது மாதம் கர்ப்பமாக இருந்த போது, என் கனவில் ஒரு பாம்பு என்னுடைய இடது காலை சுற்றிக் கொண்டு என் வயிற்றிலுள்ள இரட்டைக் குழந்தைகளை விழுங்க முயற்சித்தது. இப்படி கனவுகள் வரும்போதெல்லாம் நான் பயத்துடன் விழித்து எழுந்து ஜெபித்து பிசாசைக் கடிந்து கொண்டு விரட்டுவது வழக்கம். இது தொடர்ந்து கொண்டே இருந்தது. ஜீலை 2018 வரையில் என்னுடைய வாழ்வில் ஏதோ ஒன்று சம்பவித்தது.

நாங்கள் குடும்பமாக ஏப்ரல் 2018 முதல் நம்முடைய சபையில் ஆராதிக்க வந்தோம். பின்பு புதன் மற்றும் சனிக்கிழமை நடக்கும் ஜெபம் மற்றும் வேத ஆராய்ச்சியிலும் ஆர்வத்தோடு பங்கு பெற்றோம். நம்முடைய சபையில் ஜீலை 2018 வது மாதம்

உபவாச ஜெப மாதமாக அறிவித்திருந்தோம். அந்த மாதத்தின் கடைசி சனிக்கிழமை என்னுடைய கனவில் பாம்பு வந்து என்னுடைய வலது கரத்தைக் கடிப்பதாகப் பார்த்தேன். ஞாயிறு காலையில் நான் சோர்வோடும் பலவீனத்தோடும் காணப்பட்டேன். அன்று, ஆராதனைக்குப் போக வேண்டுமா? என்று மனதில் பெரிய போராட்டம். ஆனாலும் படுக்கையிலிருந்தபடியே என்னுடைய நாவில் அதிகாரத்தை எடுத்து பிசாசைப் பார்த்துச் சொன்னேன். "போதும் பிசாசே" நான் தேவனுடைய பிள்ளை. என்னைத் தொட உன்னால் முடியாது என்று. நான் என்னை திடப்படுத்திக் கொண்டு ஆலயத்திற்குச் சென்றேன். ஆங்கில ஆராதனை வேளையில் நம் தலைமைப் போதகரோடு சபையார் யாவரும் ஆராதிக்கிற வேளையில் நான் தேவனுடைய பிரசன்னத்தால் நிறைந்து என்னையறியாமலே என் வலது கரத்தை வேகமாக உதறினேன். அப்போது, என் வலது கரத்தில் தீயினால் உண்டான சூடுபோல உணர்ந்து திகைப்பினால் உரத்த சத்தமாய் அலறிவிட்டேன். சற்று நேரத்திற்குப் பிறகு பரலோகம் போன்ற அமைதி என் உள்ளத்தை நிரப்பிற்று. ஆராதனை தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. எனக்கு பாம்புக்கனவிலிருந்து பூரண விடுதலை கிடைத்திருந்தது. ஆனாலும் என் மனதில் சந்தேகம், மீண்டும் சொப்பணம் வருமோ என்று. சில நாட்களுக்குப் பிறகு தேவன் எனக்கு ஒரு தரிசனம் தந்தார். அதில் திரைச்சீலை திறக்கவும் எனக்கு சபையில் ஆராதனை வேளையில் நடந்த எல்லாவற்றையும் படம் போல தேவன் காண்பித்தார். இப்போது ஒரு வருடத்திற்கு மேலாக அந்த அச்சுறுத்தும் பாம்புக் கனவுகள் வரவே இல்லை. நான் மகிழ்ச்சியாக உள்ளேன். இந்த அற்புத விடுதலை தந்த தேவனுக்கு எல்லா கனமும் மகிமையும் உண்டாவதாக.

இந்த சபையின் ஆராதனையிலும், ஜெபக் கூட்டங்களிலும் பங்கு பெறுவது எனக்கு கிடைத்த பெரிய பாக்கியம். இந்தக் காலத்தின் அந்தகாரத்தோடு போராடும்படி நம்மை ஒரு சேனையாய் தயார்படுத்துகிற நம்முடைய போதகர் (ஆவிக்குரிய தலைவர்) அவர்களுக்கு நன்றி.

டிசம்பர் 2018 வியாதியைக் கண்டறிய ஆவியில் உதவி.

கடந்த டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் எனக்குக் கடுமுமையான காய்ச்சல் வந்ததினால் வியாதிப்பட்டு படுக்கையில் இருந்தேன். சில நாட்களாகத் தூங்கவும் இயலவில்லை. மருத்துவர்கள் இது சாதாரண காய்ச்சல் என்று நினைத்து மருந்து கொடுத்திருந்தார்கள். டிசம்பர் 2ம் தேதி அதிகாலை 4மணிக்கு குளிர் காய்ச்சலோடு எழுந்தேன். சில முதலுதவிகள் செய்து படுத்துக் கொண்டேன். சிறிது நேரத்தில் என்னுடைய தரிசனத்தில் நம் போதகர் எங்கள் வீட்டு ஹாலில் நடந்து ஜெபிப்பதாகப் பார்த்தேன். நாங்கள் போதகரை அழைக்கவோ, அறிவிக்கவோ இல்லை. ஆனாலும் என்ன அற்புதம்! அவர் ஆவியில் எனக்காக ஜெபித்துக் கொண்டிருந்தார். அந்த நாளில் தானே மருத்துவர்கள் டைபாய்டு என்று கண்டறிந்து சரியான மருந்துகள் கொடுக்க நான் சீக்கிரமாய் குணமானேன். இப்படிப்பட்ட ஆவிக்குரிய ஐக்கியத்தை தந்த தேவனுக்கு நன்றி.

ஆகஸ்ட் 2019. (வேலையில் அற்புதம்)

நான் ஆரக்கிள் நிறுவனத்தில் 10 வருடங்களாகப் பணிபுரிந்தேன். பின்பு வேலையை ராஜினமா செய்து ஒரு வருடம் வேலை செய்யவில்லை. அதற்குப் பிறகு நம்முடைய சபையில் சேர்ந்து போதனைகளைக் கேட்டு என்னுடைய வேலையைத் தொடரும்படி தீர்மானித்தேன். புது வேலைக்காக ஆரக்கிள் மற்றும் அநேக கம்பெனிகளில் விண்ணப்பித்தேன். எனக்கு அறிமுகமான பழைய நண்பர்கள் மூலமாக எளிதில் வேலை கிடைக்கும் என எண்ணினேன். ஆனால் ஐந்து மாதங்களாக அநேகரைத் தொடர்பு கொண்டும் இண்டர்வியூ நடத்தியும் எனக்கு வேலை கிடைக்கவில்லை.

நான் சோர்ந்து போய் வேலை தேடுவதை நிறுத்திவிட்டு தேவனிடம் சொன்னேன், இது முதல் யாரிடமும் வேலை கேட்க மாட்டேன்.

தேவனிடத்தில் இருந்து ஒரு அற்புதம் நடக்கட்டும் என்று அவருடைய கரத்தில் ஒப்புக் கொடுத்து அமைதியாக இருந்தேன்.

ஒரு நாள் காலையில் என்னுடைய வீட்டுக் கணினியில் சில வேலைகளை செய்ய துவக்கின போது, திடீரென்று ஆரக்கிள் நிறுவனத்தில் ஒரு குறிப்பிட்ட வேலைக்கான அழைப்பு தானாக ஸ்கிரீனில் தோன்றினது. எனக்கு ஒரே ஆச்சரியம். ஏனென்றால் நான் அந்த பதவிக்கு விண்ணப்பிக்கவே இல்லை. ஆனால் அது, எனக்காக அனுப்பப் பட்டது போல தோன்றினது. நான் உடனே அந்த நிறுவனத்தில் வேலை பார்க்கும் நண்பரைத் தொடர்பு கொண்டு இந்த வேலை வாய்ப்பை பற்றி விசாரித்தேன். அவர் ஒரு பணியிடம் காலியாக உள்ளது. ஆனால், என்னுடைய கல்விக்கும் வேலை அனுபவத்திற்கும் அது பொருந்தாது எனக் கூறிவிட்டார். நானோ தேவனால் கூடாதது ஒன்றுமில்லை என்று விசுவாசித்தேன். என்ன அற்புதம் ஆரக்கிள் நிறுவனத்திலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. இது தேவனால் நடந்த அற்புதமா? என்று அறிந்து கொள்ளும் ஆர்வத்தோடு அந்த வேலையின் விவரத்தை விசாரித்தேன். என்ன ஆச்சரியம் நான் அன்று காலை கணினித்திரையில் பார்த்த அதே வேலை. அடுத்த நாளே நான் நேர்முகத் தேர்வில் வெற்றி பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டேன். அவர்கள் என்னிடம் எவ்வளவு சம்பளம் எதிர்பார்க்கிறீர்கள் என்று கேட்ட போது 50 சதவீதத்திற்கும் அதிகம் என்று சொன்னேன். அடுத்த நாள் நிறுவனத்தில் என்னை அழைத்து உங்களுக்கு 62 சதவீதம் ஊதிய உயர்வு கொடுக்கிறோம் என்று அறிவித்தார்கள். நம்பவே முடியவில்லை. போதிய கல்விப் பொருத்தமோ வேலை அனுபவமோ இல்லை. ஆனால் கேட்டதிற்கும் எதிர்பார்த்ததிற்கும் அதிகமான ஊதியம். சிறந்த வேலை.

எபேசியர்3:20,21 நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதிற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த்

தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

மினி ஐசக்.

We are now on Facebook, Instagram, Twitter and Youtube

Kindly follow us.

**https://www.youtube.com/eternallightAGchurch**
**https://www.instagram.com/elagchurch**
**https://www.twitter.com/ELAGchurch**
**https://www.facebook.com/ELAGChurch/**

**We welcome your valuable feedback to elagliterature@gmail.com.**

## போதகரை பற்றி

Ps. ஆஸ்வின் ஜேம்ஸ்டட் அவர்கள் ELAG சபையின் தலைமை போதகர்.



இவர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டு, தன் செய்திகளின் மூலம் பல ஆத்துமாக்களை உயிர்ப்பிக்கும், வல்லமையான, அபிஷேகம் பண்ணப்பட்ட தேவ மனிதர். இவர் தம் கல்லூரி காலங்களில் இருந்து பகுதி நேர ஊழியம் செய்து வந்தார்.

இறையியல் பட்டதாரியான இவர், 1999 முதல் முழுநேர ஊழியம் செய்து வருகிறார். தேவ ஆவியானவரின் அபிஷேகம் நிறைந்த இவருடைய வார்த்தைகள் பலர் வாழ்வில் எழுப்புதலையும், வாழ்வாதாரத்தை உயிர்ப்பித்தும் உள்ளது. தேவ ஆவியானவரின் அபிஷேகம் நிறைந்த இவருடைய கூட்டங்களில், மக்கள் தொடப்பட்டு, தெய்வீக சுகமும், விடுதலையும் பெற்றுள்ளனர்.

இவருடைய ஊழியப் பாதையில் உணர்ச்சி பூர்வமான விடுதலை சரீரப் பூர்வமான விடுதலை, பிசாசின் கட்டுகளிலிருந்து விடுதலை மற்றும் பில்லி சூனிய கட்டுகளிலிருந்து விடுதலை போன்ற பல்வேறு நிலைகளில் கர்த்தர் இவரை வல்லமையாகப் பயன்படுத்தி வருகிறார். இவருடைய ஊழியத்தின் நோக்கம் மக்களின் வாழ்வை மாற்றி, அவர்களை முழு விடுதலைக்குள்ளாக நடத்தி, கிறிஸ்துவுக்குள் தங்களுடைய அதிகாரத்தை உணரவும் வழிநடத்துகிறது.

கர்த்தர் இவரை இளைஞர்கள் மற்றும் குடும்பங்களின் மத்தியில் பயன்படுத்தி, அவர்கள் தேவனில் அடுத்த நிலைக்குள்ளாக கடந்து செல்லவும், தேவனுடைய பிள்ளைகளுக்குண்டான அதிகாரத்தை தங்கள் வாழ்வில் பயன்படுத்தவும் வழிநடத்துகிறார். தேவ ராஜ்ஜியத்தின் மேல் உள்ள இவருடைய பேரார்வம் இவரது செய்திகளில் வெளிப்பட்டு அதை கேட்கும் மக்களின் இருதயங்களில் கர்த்தரின் மேலான பேரார்வத்தைத் தூண்டுகிறது.

## சபையைப் பற்றி

ELAG சபை 4 பேருடன் 2013ல் எளிமையாக ஆரம்பிக்கப்பட்டது. விசுவாசத்துடன் சிறுகூட்டமாகத் துவங்கினோம். ஆவிக்குரிய அதிகாரத்திலும் வல்லமையிலும் நடக்கிற தேவ பிள்ளைகளை உருவாக்கி உலகமெங்கிலும் சுவிஷேசத்தை அறிவித்து, தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டுவதே நம்முடைய நோக்கம்.

## புத்தகத்தைப் பற்றி

இந்த புத்தகம் சபையின் இலக்கிய ஊழியக் குழுவால் உருவாக்கப்பட்டது. நமது சபையின் தலைமை போதகரால், ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை கொடுக்கப்படும் செய்திகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் பிரயோஜனத்திற்காக, வெளியிடப்பட்டுள்ளது. இப்புத்தகமானது உங்கள் வளர்ச்சிக்கும் ஆசிர்வாதத்திற்கும் ஏதுவாக அமையட்டும் என்று நாங்கள் வாழ்த்துகிறோம்.

ETERNAL LIGHT AG
*let your light shine*


**Eternal Light AG Church**
Opp. to St.Xavier's School,
2nd Cross, Beddadasapura Road,
Electronic City Phase I,
Bengaluru-560100,
Karnataka, India

**Sunday Services**
English : 9AM - 11AM Hindi: 5:30PM - 7PM
Tamil : 11:30AM - 01:30PM
Mob : 6364066791 / 6364066792
E-mail : ecitycf@gmail.com
Web : www.elagchurch.com